# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

Follow us:

மலர் : 03, இதழ் : 43 சுபகிருது வருடம், ஆவணி மாதம் 03ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(19.08.2022) ஹிஜ்ரி - 1444, முஹர்ரம் - 20 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## ஸ்கொட்லாந்து யுவதி தலைமறைவு



02 பக்கம்

## மீள்கிறது பொருளாதாரம்

## பணவீக்கம் வீழ்ச்சி

## வருமானம் அதிகரிப்பு

## மத்திய வங்கியின் ஆளுநர் தகவல்



02 பக்கம்

# மாணவர் பேரணிமீது கொழும்பில் தாக்குதல்!

### கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை வீச்சால் பதற்றம்



படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

•யோ.தர்மராஜ்

“ரணில் - ராஜபக்ஷ டீல் அரசாங்கத்தை விரட்டியடிப்போம்” என கொழும்புக்குள் மீண்டும் நுழைந்து ஆர்ப்பாட்டப் பேரணி நடத்திய அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவர்கள்மீது பொலிஸார் நேற்று கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் நடத்தினர்.

இதன்போது அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

“உரிமைக்காக கொழும்புக்கு செல்வோம், ரணில் - ராஜபக்ஷ டீல் அரசாங்கத்தை விரட்டியடிப்போம்” என்ற தொனிப்பொருளில் நேற்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்திருந்தது.

02 பக்கம்

## புதிய கூட்டணியின் தலைவராகிறார் விமல்

### செப். 04இல் உத்தியோகபூர்வ அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

ஆளுந்தரப்பிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் 10 கட்சிகளும் இணைந்து உருவாக்கவுள்ள புதிய அரசியல் கூட்டணி எதிர்வரும் 4ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது. இதன் தலைவராக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர்,...

02 பக்கம்

## 22ஆவது திருத்தத்துக்கு எதிராக 9 மனுக்கள் தாக்கல்

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தின் சில பிரிவுகள் அரசியலமைப்புக்கு முரணானவை என தீர்ப்பளிக்கப்பட வேண்டுமெனக் கோரி 9 மனுக்கள் நேற்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு, கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்ட 9 தரப்பினரால் உயர்நீதிமன்றில் இந்த மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டுள்ளன.

02 பக்கம்

## நிலையான வட்டி வீதங்கள்; மத்திய வங்கி தீர்மானம்

•யோ.தர்மராஜ்

மத்திய வங்கியானது, வட்டி வீதங்களை எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து பேணு வதற்கு தீர்மானம் எடுத்துள்ளது.

அதன்படி, வைப்புக்கான வட்டி வீதத்தை 14.5 சதவீதமாகவும் கடன் வழங் கல் வீதத்தை 15.5 சதவீதமாகவும் பேணுவதற்கு தீர்மானித்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மத்திய வங்கி கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போது, மத்திய வங்கி நாணய சபை எடுத்த தீர்மானங்களை அறிவிக்கும்போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அங்கு உயர் அதிகாரி விளக்கமளிக்கையில், மத்திய வங்கியின் நாணய சபைக் கூட்டத்தின்போது, வட்டி வீதங்களை எவ்வித மாற்றமும் இன்றி தொடர்ந்து பேணுவதற்கு தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## வெளிநாட்டு நாணயங்களை வைப்பிலிட பொதுமன்னிப்பு

### ஒருமாத காலம் வழங்கியது மத்திய வங்கி

•யோ.தர்மராஜ்

பொதுமக்கள் கைவசம் வைத்துள்ள, வெளிநாட்டு நாணயங்களை வைப்பிலிடுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு ஒரு மாத பொதுமன்னிப்பு காலத்தை நிதியமைச்சு அறிவித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு நாணயங்களை வங்கித் தொழில் முறைமையினுள் கவர்ந்துகொள்ளும் பொருட்டு இந்த சலுகை அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி நேற்று வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஓகஸ்ட் 15ஆம் திகதிமுதல் ஒரு மாதத்துக்கு இந்த நடைமுறை அமுலில் இருக்குமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் அல்லது வர்த்தக...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

பொலிஸுக்கு வேலை குறைவோ...? மேர்வின் சில்வாவை கைது செய்யுறதுக்கெல்லாம் நேரத்தை செலவழிச்சுக் கொண்டு...



## கிரீன் கார்ட் தேடும் கோட்டாபய

நாட்டை விட்டுச்சென்று தாய்லாந்தில் தற்போது தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மீண்டும் அமெரிக்காவுக்குச் சென்று தனது மனைவி மற்றும் மகனுடன் அங்கு குடியேற அமெரிக்க கிரீன் கார்டைப் பெறுவதற்கு காத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அவரது மனைவி அயோமா ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ளதால், கிரீன் கார்ட் பெறுவதற்கான விண்ணப்பத்தை அமெரிக்காவில் உள்ள ராஜபக்ஷவின் சட்டத்தரணிகள் கடந்த மாதமே தொடங்கிவிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.



இந்த நடைமுறையின் ஒரு கட்டமாக, இப்போது கொழும்பில் உள்ள அவரது சட்டத்தரணிகள் மேலதிக ஆவணங்களை இங்கு சமர்ப்பித்து நடைமுறையை முன்னெடுத்துச்செல்ல வேண்டியுள்ளது.

02 பக்கம்



## ரூபவாஹினிக்குள் சண்டித்தனம்; 15 வருடங்களுக்குப் பிறகு மேர்வின் கைது

02 பக்கம்

## பெப்ரவரியில் உள்ளூராட்சித் தேர்தல்

•யோ.தர்மராஜ்

தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு எவ்விதத்திலும் இணக்கமில்லை. எனவே, அடுத்த வருடம் பெப்ரவரி இறுதியில் அல்லது அதற்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவோமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர்...

02 பக்கம்

## தேசிய அரசாங்கம் அமைக்க ஆலோசனை

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க முடியாத பட்சத்தில் தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்தன.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடியுள்ளபோதிலும், சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படாத நிலையில், பிற கட்சிகளிலிருந்து ‘இழுத்தெடுக்கப்பட்ட’ உறுப்பினர்களுடன் புதிய அமைச்சரவை நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக அறியமுடிகின்றது.

இந்த அமைச்சரவை நியமனத்தின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரே அநேக அமைச்சுகளைப் பெற வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய அமைச்சரவை நியமனத்தின்போது, அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வழங்கவேண்டிய கட்சியின் மாவட்ட தலைவர்களின் பட்டியலை பொதுஜன பெரமுன தரப்பு ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளது.

02 பக்கம்

## தினமணி

## கப்பலல்ல, கடன் வலை!

**இலங்கை வந்துள்ள சீனாவின் உளவுக் கப்பல் குறித்து தமிழகத்தின் தினமணி பத்திரிகையின் நேற்றைய தலையங்கம்**

இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்திருக்கிறது சீனாவின் உளவுக் கப்பலான ‘யுவான் வாங்-5’. சர்வதேச விதிமுறைகளுக்குட்பட்டே தங்கள் நாட்டு கப்பல் இலங்கைக்கு வந்துள்ளதாகவும், ஆராய்ச்சி நடவடிக்கையில் ஈடுபடும் இக்கப்பலால் எந்த நாட்டின் பாதுகாப்புக்கும் பாதிப்பு ஏற்படாது எனவும் சீன வெளியுறவுத்துறை விளக்கம் அளித்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் அந்நிய இராணுவ கப்பல்கள் பயணிப்பதை இந்தியா தொடர்ந்து எதிர்த்து வருகிறது. அப்படியிருக்கும்போது, முழுக்க முழுக்க வர்த்தகத் துறைமுகமான ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு ‘யுவான் வாங்-5’ கப்பல் வந்திருப்பதை சந்தேகக் கண்கொண்டே பார்க்க வேண்டியிருக்கிறது.

பொதுவாக ஆராய்ச்சிக் கப்பல் எனக் கூறப்பட்டாலும் யுவான் வாங் ஓர் உளவுக் கப்பல்தான். கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளின் விபவரங்கள், கடற்படைத் தளங்களின் விபரங்கள் உள்ளிட்டவற்றைக்கூட இக்கப்பலால் பெறமுடியுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

02 பக்கம்

## இம்மாத இறுதியில் ஐ.எம்.எவ். குழு வருகை

•யோ.தர்மராஜ்

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்) குழுவொன்று இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

மத்திய வங்கி கட்டடத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, கருத்து தெரிவிக்கும்போதே மத்திய வங்கி ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

02 பக்கம்

## உஷ்



**ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் யாழ்.எம்.பி. விஜயகலா மகேஸ்வரனை வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் ஜனாதிபதி ரணில் அதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லையாம். அரசியல் கலப்பில்லாத, வடக்கு மாகாண தமிழ் அரசியல் கட்சிகளின் எதிர்ப்பில்லாத ஒருவரை ஆளுநராக நியமிக்கலாம் என்பது ரணிலின் நிலைப்பாடாம்.**

## தமிழறிஞர் நெல்லைக் கண்ணன் காலமானார்



10 பக்கம்

## ரூபவாஹினிக்குள்...

எவ். அஸ்லம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து அதன் தலைவர் உள்ளிட்ட பணியாளர்களை தாக்கிய குற்றச்சாட்டுக்காக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா குற்றப் புலனாய்வுப்



படப்பிடிப்பு :- சமன் அபேசிறிவர்தன

பிரிவினரால் நேற்று (18) கைதுசெய்யப்பட்டுள்ளார். சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கமைய மேர்வின் சில்வா கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்த மேர்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் அங்கு முறையற்ற விதத்தில் நடந்துகொண்டனர். அதனால் திணைக்களத்தில் பெரும் பதற்றம் நிலவியது.

இது தொடர்பிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலும், இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் போதைப்பொருள் வியாபாரியான குடு நுவன் என்பவரையும் லால் என்பவரையும் கைதுசெய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் மேர்வின் சில்வா பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நிலையான வட்டி வீதங்கள்...

அதன்படி, துணைநில் வைப்பு வசதி வட்டி வீதத்தை 14.5 சதவீதமாகவும் துணைநில் கடன் வழங்கல் வீதத்தை 15.5 சதவீதமாகவும் பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்டதைவிட விலை அழுத்தங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தொழிலின்மையில் மேல்நோக்கி நகர்வு காணப்படுகின்றது. தனியார் வருமானங்களினால் தனியாருக்கான கொடுகடனில் குறிப்பிட்டளவு வீழ்ச்சி காணப்படுகின்றது. காலப்போக்கில் இறக்குமதியில் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, அந்நிய செலாவணியில் சிறிய மேம்பாடும் காணப்படுகின்றது. உலக சந்தையில் சில பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடைந்துள்ளதால் காலப்போக்கில் உள்நாட்டிலும் பொருட்களின் விலைகள் வீழ்ச்சியடையும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

பொருளாதார நெருக்கடி வீழ்ச்சியடைகின்றது. சுற்றுலாத்துறையில் சிறிய வளர்ச்சி காணப்படுகின்றது. உள்நாட்டு, வெளிநாட்டு சந்தையில் அந்நிய செலாவணிகளும் அதிகரித்துவருகின்றன.

மத்திய வங்கியால் அரசாங்கத்துக்கு வழங்கப்படுகின்ற நிதியிடல் தேவைப்பாடு தற்போது குறைவடைந்து வருகின்றது. கடந்த மாதங்களை விட ஓகஸ்ட் மாதத்தில் மிகக் குறைவான நிதியிடலே அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. விலையில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் காலப்போக்கில் இந்த நிலைமை மேலும் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பணவீக்கம் அதிகரிக்கும் வேகம் வீழ்ச்சியடைந்து வருகின்றது. இந்த நிலைமை காலப்போக்கில் மேலும் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## புதிய கூட்டணியின் ...

முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச நியமிக்கப்படவுள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஆளுந்தரப்பிலிருந்த விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸவித்தாரண, ஏ.எல்.எம். அதாவுல்லா உள்ளிட்டோரின் கட்சிகள் உள்ளிட்ட 10 கட்சிகள் வெளியேறி, சுயாதீனமாக செயற்படுவதாக அறிவித்தனர்.

இதனையடுத்து, இந்த 10 கட்சிகளும் இணைந்து புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பாக தொடர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துவருகின்றது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு கொமியூனிஸ்ட் கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே, கட்சி அறிவிக்கப்படும் திகதி மற்றும் தலைவர் யார் என்பது குறித்து தெரிவிக்கப்பட்டது.

எங்களுடைய 10 கட்சிகளும் இணைந்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குகின்றோம். அது எதிர்வரும் 4ஆம் திகதி, மஹரகம இளைஞர் சேவை கேட்போர் கூடத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்படும் என சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

இதேவேளை, எங்களுடைய புதிய அரசியல் கூட்டணியின் தலைவராக விமல் வீரவங்ச நியமிக்கப்படுவார் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். மேலும், டலஸ் அழகப்பெரும உள்ளிட்டோர் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிக்கு வந்த பின்னர், அவர்களுடன் எங்களுடைய பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

## தேசிய அரசாங்கம்...

இதன்மூலம், கடந்த அரசாங்கத்தில் பதவி வகித்த அதே தோல்வியடைந்த அமைச்சர்களே புதிய அரசாங்கத்திலும் பதவி வகிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் சில உறுப்பினர்களை அமைச்சரவைக்கு இழுத்தெடுக்க ஜனாதிபதி தீவிர முயற்சி மேற்கொண்டபோதும் அது வெற்றியளிக்கவில்லை. இதையடுத்து, அவர்களை மாவட்ட அபிவிருத்திக்குழு தலைமைப் பதவியை யாவது ஏற்கவைக்க பகீரதப்பிரயத்தனம் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவராக மேற்படி இரண்டு கட்சிகளையும் சேர்ந்த யாராவது ஒருவரையேனும் நியமிக்க முயற்சிகள் நடக்கின்றன.. இது தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரனுடனும் ஜனாதிபதி தரப்பு பேசிப்பார்த்துள்ளது. எனினும், விக்னேஸ்வரன் அதை நிராகரித்துவிட்டார். முன்னதாக அரசில் இணையும் கோரிக்கையையும் அவர் நிராகரித்திருந்தார்.

சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைக்க முடியாத பட்சத்தில் தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பிலும் அரசாங்கம் ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

சுமார் முப்பது பேர்கொண்ட அமைச்சரவை நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

## வெளிநாட்டு நாணயங்களை...

வெளிநாட்டு நாணயக் கணக்கில் குறித்த வெளிநாட்டு நாணயங்களை வைப்பிலிட முடியும் என்பதோடு, உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி போன்ற அங்கீகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விற்பனை செய்ய முடியும் எனவும் மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை அந்நிய செலாவணி திணைக்களத்தின் 0112 477 255, 0112 398 511 என்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியுமென இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

## ஸ்கொட்லாந்து...

ஸ்கொட்லாந்து பிரஜையான கெய்லி பிரேசர் இதுவரை இலங்கையை விட்டு வெளியேறவில்லை என குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவரை நாடு கடத்துமாறு குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

எனினும், தற்போது அவர் இருக்கும் இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கோட்டா கோ கம போராட்டத்தில் கலந்துகொண்டு அது தொடர்பான காணொளிகளை வெளியிட்டமையை சுட்டிக்காட்டி நாட்டிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், தன்னை வெளியேற்றுவதற்கான தீர்மானத்துக்கு தடை விதிக்குமாறு கோரி அவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 22 ஆவது திருத்தத்துக்கு...

22ஆவது அரசியலமைப்புத் திருத்தமானது, அரசியலமைப்பின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, அதன் சரத்துகளை ஏற்க வேண்டுமானால், மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் சர்ஜன வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் பெற வேண்டும் என்ற தீர்ப்பை வழங்க வேண்டும் என்றும் மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

## இம்மாத இறுதியில்...

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய, இம்மாத இறுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இலங்கை வரவுள்ளதோடு, அதனுடன் தொடர்புடைய உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது – என்றார்.

## பெப்ரவரியில் உள்ளூராட்சி...

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் தற்போது பெரும்பாலானோர் நாடாளுமன்றத் தேர்தல் குறித்து பேசுகின்றனர். நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவேண்டுமாயின் நாடாளுமன்றத்தை கலைக்கவேண்டும். அரசியலமைப்புக்கமைய அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்கு பின்னரே நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைக்கும். அதன்படி, நாடாளுமன்றத்தை கலைத்து, தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தால், தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்கு தயாராகவுள்ளது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்திலுள்ள முரண்பாடுகள் காரணமாக பல வருடங்களாக மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாதுள்ளது. ஆனால், சட்டமூலத்தில் சிறிய திருத்தத்தை செய்து, பழைய முறையிலாவது மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கூறப்பட்டுள்ளது. எனவே, பழைய முறையிலோ அல்லது புதிய முறைலோ மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தயாராகவுள்ளது.

அதேபோன்று, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு எவ்விதத்திலும் இணக்கமில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இருக்க வேண்டும்.

இந்நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரம் செப்டெம்பர் 20ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும். உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக ஒக்டோபர் 20ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் ஆணைக்குழு உரிய முடிவை எடுக்கும். அதன்படி, அடுத்த வருடம் பெப்ரவரி இறுதியில் அல்லது அதற்கு முன்னர் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவோம் - என்றார்.

## மாணவர் பேரணி மீது...

அடக்குமுறையை நிறுத்துவதுடன், கைது செய்யப்பட்ட அனைத்து போராட்டக்காரர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டது. அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உடனடியாக இரத்துசெய், மக்கள் சக்தியை உறுதிப்படுத்தும் புதிய அரசியலமைப்புக்காக போராடுவோம், இனி கடன் இல்லை, திருடப்பட்ட பணத்தைக் கொடு, பொருட்களின் விலை-வரிச்சுமையைத் தாங்க முடியாது.

மூன்று வருடங்களாக முடங்கிக் கிடக்கும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை உடனடியாக திற என கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்பேரணி நேற்று பிற்பகல், லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து ஆரம்பித்து நடைபாதை வழியாக கொழும்பு கோட்டை நோக்கிச் சென்றது. எனினும், ஆர்ப்பாட்டக்காரர்களை கோட்டைக்கு நுழையவிடாது, கொழும்பு - யூனியன் பிளேஸ் மற்றும் நகர மண்டபத்திற்கு இடையிலான வீதி பொலிஸாரால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்தது.

எனினும், அதனையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னோக்கிச் செல்ல முற்பட்டபோது, கொழும்பு கொம்பனி வீதியில் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் சிதறி ஓடியதுடன், அங்கிருந்த பொலிஸாருக்கு இடையூறு செய்த சிலரையும் பலவந்தமாக கைது செய்தனர்.

கொழும்பு காலிமுகத்திடலில் 124 நாட்களாக முன்னெடுக்கப்பட்ட போராட்டம் கடந்த 9ஆம் திகதியுடன் கைவிடப்பட்டிருந்த நிலையில், 9 நாட்களுக்குப் பின்னர் நேற்று அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தால் மீண்டும் அரசாங்கத்திற்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக லிப்டன் சுற்றுவட்டாரத்தில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிரீன் கார்ட் தேடும்...

தாய்லாந்தில் தற்போது தஞ்சமடைந்துள்ள கோட்டா, தனது மனைவியுடன் பாங்கொங்கில் உள்ள ஹோட்டலில் இருக்கும் முன்னாள் ஜனாதிபதி, நவம்பர் மாதம் வரை தாய்லாந்தில் தங்குவதற்கு ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தார். ஆனால், அந்தத் திட்டத்தை தற்போது இரத்து செய்துவிட்டு, ஓகஸ்ட் 25ஆம் திகதி மீண்டும் இலங்கை திரும்பவுள்ளார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, கோட்டாபய தனது சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசித்ததாகவும், பாதுகாப்பு காரணங்களுக்காக தாய்லாந்தில் தங்க திட்டமிட்டிருந்தாலும், எதிர்பார்த்தபடி சுதந்திரமாக நடமாடும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால், இந்த மாத இறுதியிலேயே இலங்கை திரும்ப முடிவு செய்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ தாய்லாந்து சென்றடைந்ததும், அவருக்கு அந்த நாட்டு பொலிஸார் சில கட்டுப்பாடுகளை விதித்தனர். அந்த ஹோட்டல் அறையைவிட்டு வெளியே தலையையும் காட்டக்கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளனர்.

கோட்டாபய தங்கியிருக்கும் ஹோட்டலில் அமைவிடம் பற்றிய தகவல் வெளியாகவில்லை. எனினும், அந்த ஹோட்டலில் சிவில் உடையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

தாய்லாந்தில் பௌத்த வணக்கஸ்தலங்களுக்கு செல்ல விரும்பிய கோட்டா, அதற்கான அனுமதியை கோரியுள்ளார். அதற்கும் தாய்லாந்து அனுமதியளிக்கவில்லை.

நான்கு சுவருக்குள் அடைந்திருக்க முடியாது என்பதால், நாடு திரும்பும் முடிவை கோட்டாபய எடுத்துள்ளார்.

இந்த மாதம் கோட்டாபய இலங்கைக்கு திரும்பியதும், அவருக்கு அரச இல்லம் மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பை வழங்குவது குறித்து அமைச்சரவை ஆலோசிக்கவுள்ளது.

பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து, கோட்டாபய இலங்கையில் எங்கும் பதுங்கியிருக்க முடியாத நிலையில், கடந்த மாதம் மாலைதீவுக்கு தப்பிச் சென்றார். மருத்துவ விசாவில் சிங்கப்பூருக்குள் நுழைந்த அவர், முடிந்தவரை அங்கேயே இருக்க விரும்பினாலும், ஒரு முறைக்கு மேல் அவரது விசாவை நீடிக்க சிங்கப்பூர் மறுத்துவிட்டது.

இதையடுத்து, கோட்டாவும் மனைவியும் தாய்லாந்துக்குச் சென்றனர். பாதுகாப்பான தங்குமிடத்தை அடையாளம் காணும்வரை, அவர் அங்கேயே இருக்க முடியும் என்று உறுதியளிக்கப்பட்டது.

## மீள்கிறது பொருளாதாரம்...

யோ.தர்மராஜ்

மத்திய வங்கியினால் கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய பொருளாதார நெருக்கடி குறைவடைந்து சாதாரண நிலைமைக்குத் திரும்பிவருகின்றது. காலப்போக்கில் குறுகிய கடன் இல்லாது, எங்களுக்கான தேவைகளை எங்களுடைய நிதியைக்கொண்டு பூர்த்திசெய்துகொள்ளக்கூடிய நிலைமை காணப்படுகின்றதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பணவீக்கம் வீழ்ச்சியடைந்துவருவதுடன், நாட்டுக்குத் தேவையான பெற்றோல், டீசல், எரிவாயு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவுசெய்வதற்கான அந்நிய செலாவணியை திரட்டிக்கொள்ளக்கூடிய சக்தி எமக்குள்ளது. நாங்கள் எடுத்த தீர்மானங்களுக்கமைய இறக்குமதி குறைவடைந்து, ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மத்திய வங்கி கட்டிடத்தில் நேற்று (18) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மத்திய வங்கி கடந்த காலங்களில் எடுத்த தீர்மானங்களின் பிரதிபலன்கள் தற்போது வெளிப்படுகின்றன. குறிப்பாக, பணவீக்கம் 70 வீதத்தை விட அதிகரிக்கும் வாய்ப்பிருப்பதாக எதிர்பார்த்தோம். எனினும், மின் கட்டண உயர்வு போன்றவற்றினால் பணவீக்கம் வீழ்ச்சியடையும் சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன.

இதேவேளை, கடந்த காலத்தில் அந்நிய செலாவணி கையிருப்பில் காணப்பட்ட கடுமையான தட்டுப்பாடு தற்போது சாதாரண நிலைமைக்கு வந்துள்ளது. நாட்டுக்குத் தேவையான பெற்றோல், டீசல், எரிவாயு, மருந்து மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான அந்நிய செலாவணியை திரட்டிக்கொள்ளக்கூடிய சக்தி எங்களுக்குள்ளது. நாங்கள் எடுத்த தீர்மானங்களுக்கமைய இறக்குமதி குறைவடைந்து, ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளது.

காலப்போக்கில் குறுகிய கடன் இல்லாது, எங்களுக்கான தேவைகளை எங்களுடைய நிதியைக்கொண்டு பூர்த்திசெய்துகொள்ளக்கூடிய நிலைமை காணப்படுகின்றது. மேலும் கேள்வி பக்கமிருந்து பணவீக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. விலையில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. நாட்டில் தற்போதும் 60 வீதத்துக்கு அதிகமான பணவீக்கம் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். இதனாலேயே அதிக வட்டி வீதத்தைக் குறைக்காமல் தொடர்ந்து பேணுவதற்கான தேவையேற்பட்டுள்ளது. ஆனால், வட்டி வீதத்தை அதிகரிப்பதற்கான தேவையிருக்கவில்லை. எனவே, தற்போது எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களுக்கமைய அதன் பிரதிபலன் தொடர்ந்து கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம். தற்போது நெருக்கடி சாதாரண நிலைமைகுத் திரும்புவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

காலப்போக்கில், அரச நிதிக் கொள்கை, புதிய வரவு–செலவுத்திட்டத்தை முன்வைத்தல், வட்டிக்கொள்கைகள் என்பன நடைமுறைப்படுத்தும்போது நாட்டின் நெருக்கடி நிலைமையை சாதாரண நிலைமைக்குக் கொண்டுவர முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

மேலும், ஏற்றுமதியாளர்களுக்கு புதிய திட்டத்தை உருவாக்கி, அவர்கள் கொண்டுவரும் நிதியை உரிய முறையில் ரூபாவிற்கு பரிமாற்றம் செய்கின்றனரா என்பதை கண்காணிப்பதற்கான நடவடிக்கையையும் எடுப்போம். கறுப்புச் சந்தை முறையில் வீழ்ச்சி காணப்பட்டு, வங்கி கணக்குகளில் நிதி வைப்பிடல் அதிகரித்து, அந்நிய செலாவணியிலும் அதிகரிப்பு காணப்படுகின்றது. எனவே, உண்டியல் முறை பாவனையையும் எதிர்காலத்தில் கட்டுப்பாட்டுக்குக்குள் கொண்டு வருவோம். மத்திய வங்கி தற்போது எடுத்துள்ள தீர்மானங்களுக்கமைய எதிர்காலத்திலும் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டில் கடந்த வருடத்தில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியை விட தற்போதைய நெருக்கடி வீழ்ச்சியடைந்துள்ளது. பெற்றோல், டீசல் மற்றும் எரிவாயு தட்டுப்பாடும் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே, நாட்டில் தற்போதைய நெருக்கடியில் தளர்வு காணப்படுகின்றது. காலப்போக்கில் மேலும் தளர்வு நிலைமை ஏற்படலாம் - என்றார்.

## கப்பலல்ல, கடன் வலை!...

சீனாவின் தேசிய விண்வெளி ஆய்வு மையத்தால் அக்கப்பல் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும், இராணுவ ரீதியிலான பல்வேறு பயன்பாடுகளை அக்கப்பல் கொண்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கப்பல் கடந்த ஓகஸ்ட் 11ஆம் திகதியே ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைவதாக இருந்தது. ஆனால், இந்தியாவும் அமெரிக்காவும் ஆட்சேபித்ததையடுத்து, உளவுக் கப்பலின் வருகையை ஒத்திவைக்குமாறு சீனாவை இலங்கை அரசு கேட்டுக்கொண்டது.

சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருட னும் மேற்கொள்ளப்பட்ட விரிவான பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்பட்டதையடுத்து சீன உளவுக் கப்பலின் வருகைக்கு அனுமதியளிக்கப்பட்டதாக இலங்கை தெரிவித்துள்ளது. இந்த விவகாரத்தில் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்ததாக வெளியான தகவலை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு மறுத்துள்ளது. இதிலிருந்து இந்தியாவின் ஒப்புதலை இலங்கை பெற்றிருக்கக் கூடும் என்று சந்தேகிக்க இடம் இருக்கிறது.

சீன உளவுக் கப்பல் விவகாரத்தை இலங்கை அரசு முறையின்றி கையாண்டதாக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு இந்த நிலை ஏற்பட, சீனாவிடம் வாங்கிய கடன்தான் காரணம். இலங்கையின் மொத்த கடன் மதிப்பில் சீனாவின் பங்கு மட்டும் சுமார் 20 வீதம் எனக் கூறப்படுகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த ஹம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமானப் பணிக்காக வாங்கிய கடன் தொகையை திருப்பிச் செலுத்த முடியாமல் அதன் 70% பங்கை 'சீனா மெர்ச்சன்ட்ஸ் போர்ட்' நிறுவனத்துக்கு அளித்துள்ளது இலங்கை. மேலும், அத்துறைமுகத்தை 99 ஆண்டுகால குத்தகைக்கும் சீன நிறுவனத்துக்கு இலங்கை வழங்கியுள்ளது.

2017ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்துக்கு அளிக்கப்பட்டது. உள்நாட்டில் அப்போது எழுந்த கடும் எதிர்ப்பை ஆட்சியாளர்கள் பொருட்படுத்தவில்லை.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் உளவுக் கப்பல் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டாது என இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்திருந்தாலும், முழுக்க முழுக்க சீன நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இலங்கை அரசின் செல்வாக்கு எந்தளவுக்கு இருக்கும் என்பது தெரியவில்லை. எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட பணிகளுக்காக எதிர்வரும் 22ஆம் திகதிவரை இக்கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் எனவும், எந்தவிதமான அறிவியல் ஆய்வையும் நடத்தக்கூடாது என நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் இலங்கை தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால், இந்தக் கப்பலின் வருகை மூலம் சீனா - இலங்கை இடையேயான விண்வெளி அறிவியல், தொழில்நுட்பத்துறைகள் மேம்படும் என கப்பலின் கெப்டன் கூறியதாக ஹம்பாந்தோட்டை துறைமுக நிர்வாகம் தெரிவித்துள்ளது. அதிலிருந்து சீனாவின் நோக்கமும் இலங்கையின் தர்மசங்கடமும் வெளிப்படுகின்றன.

இலங்கையில் கடந்த பெப்ரவரியில் பொருளாதார நெருக்கடி தலையெடுத்தபோது, முதல் நாடாக அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்வதற்கான உதவிகளை வழங்கியது இந்தியாதான். கொரோனா, அந்நிய செலாவணி பற்றாக்குறை போன்றவை காரணமாக பாதிக்கப்பட்ட துறைகளை மீட்டெடுக்கும் முயற்சியிலும் இலங்கைக்கு இந்தியா உதவிகளை அளித்து வருகிறது.

2020இல் ராஜபக்ஷ சகோதரர்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்த பின், நீண்டநாள் கூட்டாளியான இந்தியாவைப் புறந்தள்ளி சீனாவுடன் நெருக்கம் காட்டத் தொடங்கினர். அதையெல்லாம் மனதில் வைத்துக்கொள்ளாமல், இலங்கை மக்களுக்கு இந்தியா என்றும் துணை இருக்கும் என்கிற கொள்கையின் உறுதிப்பாட்டுடன் பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீள்வதற்கு இந்தியா ஏராளமான உதவிகளை செய்து வருகிறது.

இப்போது சீனாவின் உளவுக் கப்பல் வருகையால் இந்தியாவுக்கு நேரடியாக எந்த ஆபத்தும் நேர்ந்துவிடப்போவதில்லை. ஆனால், இலங்கையின் இப்போதைய இக்கட்டான பொருளாதார சூழ்நிலையில் தனக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் வகையிலான சீனாவின் உளவுக் கப்பலை அனுமதித்திருக்கக் கூடாது. ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு குத்தகைக்கு விட்டதன் பின்விளைவை அனுபவிக்கிறது இலங்கை.

## ஐ.நா. ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் - இந்திய வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் குழு சஜித்தை சந்தித்து பேச்சு





ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய பணிப்பாளர் டேவிட் மெக்லன் கர்ருக்கும் (David McLachlan-Karr) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (17) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடலில் பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் முகவர் நிலையங்களின் செயற்பாடுகளுக்கு வழிகாட்டும் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி கூட்டுறவுச் சட்டகத்தை (UNSDCF) 2023-2027 அறிமுகப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, அது தொடர்புடைய கலந்துரையாடல் இடம்பெற்றது.

இலங்கை எதிர்கொள்ளும் சில பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை காரணமாக, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்களைப் பாதுகாக்க ஐ.நா. தலையீடு தேவை எனவும் வலியுறுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையுடன் முறையான மற்றும் நேர்மறையான ஈடுபாட்டின் முக்கியத்துவமும் கவனத்தில் கொள்ளப்பட்டது. டேவிட் மெக்லன் கர், உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் திருமதி ஹனா சிங்கரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

இதேவேளை, இந்திய வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் குழுவொன்றுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையிலான சந்திப்பொன்றும் நேற்று முன்தினம் (17) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தொடர்ச்சியாக இந்நாட்டில் மேலும் முதலீடு செய்வதற்கும், வணிக வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கும் இந்திய வணிக சமூகத்தை ஊக்குவிக்கவும் அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதோடு, தொழிற்துறைகளை மேலும் மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் தேவையான சூழல் தயார் செய்யப்பட வேண்டும் எனவும் இச்சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற குழுக்களூடாக அரசாங்கத்துக்கு ஒத்துழைக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

## அமைச்சுப் பதவிகளை ஏற்று மக்களுக்கு சுமையாக விருப்பமில்லையென ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. சுட்டிக்காட்டு



நாடாளுமன்றத்தை பலப்படுத்தி அதனூடாக செயற்படுவேன் என தனது கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி தெளிவுபடுத்தியுள்ளார். எனவே, குழுக்கள் முறைகளின் ஊடாக நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றக் குழு அமைப்பில் இருந்தவாறு அரசாங்கத்திற்கு உதவ தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிளவுபடுத்த சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தமது கட்சியை ஒருபோதும் பிளவுபடுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில், சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசாங்கம் எவ்வாறு ஆட்சி அமைக்கும் என இன்று நாடு முழுவதும் பேசப்படுகிறது. இது குறித்து எதிர்க்கட்சிக்குள்ளும் தொடர்ந்து பேசப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தியாக இந்நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு தேவையான உதவிகளை வழங்க தீர்மானித்தோம். நாடாளுமன்றத்தை பலப்படுத்தி அதனூடாக செயற்படுவேன் என ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் தனது கொள்கைப் பிரகடன உரையில் தெளிவுபடுத்தியுள்ளார். எனவே இந்தக் குழுக்கள் முறைகளின் ஊடாக நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்ற குழு அமைப்பில் இருந்தவாறு அரசாங்கத்திற்கு உதவ தீர்மானித்துள்ளோம்.

ஐக்கிய மக்கள் சக்தியாக அமைச்சர் பதவிகளை பெற்று மக்களுக்கு சுமையாக மாற நாங்கள் விரும்பவில்லை. அரசாங்கத்தில் ஆளுநர் பதவிகளைப் பகிர்வதில் ஏற்கனவே பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம். அமைச்சுகளுக்கு பலரும் முன்மொழியப் படுகின்றனர். எனினும் நாம் பதவிகளுக்கு பேராசை கொள்ளாமல் பதவிகளை பெறாமல் இந்நாட்டின் வேலைத்திட்டத்திற்கு உதவ தயாராக உள்ளோம்.

சில ஊடகங்கள் மூலம் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிளவுபடுத்த சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையிட்டு வருந்துகிறோம். ஐக்கிய மக்கள் சக்தியை ஒருபோதும் பிளவுபடுத்த முடியாது என்பதை நாங்கள் தெளிவாகக் கூறுகின்றோம்.

ஒரு கட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றதும் எம்மில் பெரும் குழுவொன்று செல்வதாக கூறப்பட்டது. ஆனால் இரண்டு பேர்தான் சென்றனர். நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் உறுப்பினர் ஒருவர்கூட கட்சியின் கொள்கைக்கு புறம்பாக வாக்களிக்கவில்லை.

மத்தும பண்டார உள்ளிட்ட 20பேர் ரணிலின் பக்கம் நெருக்கம் என பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அது முற்றிலும் பொய்யான அறிக்கை. ஊடகங்கள் இதைவிட இன்னும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். 2006இல் தான் எனக்கு முதலில் அமைச்சு வழங்கப்பட்டது. அப்போது நான் கட்சியை விட்டுச் செல்லவில்லை. இந்த ஊழல் கும்பலை வைத்து நாட்டை ஆளப்போகும் அரசாங்கத்திற்கு ரஞ்சித் மத்தும பண்டார செல்லமாட்டார் என்பதை தெளிவுபடுத்துகிறேன். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு எமது கட்சியின் ஆதரவை வழங்குவோம். எமது கட்சியிலிருந்து யாரும் போவதில்லை.

பலமான அடித்தளத்துடனேயே ஐக்கிய மக்கள் சக்தியை நிறுவினோம் என்று இவர்களுக்குச் சொல்கிறோம். ஐக்கிய மக்கள் சக்தி என்பது கூட்டுணர்வு, ஒற்றுமை மற்றும் நட்பு என்பன அப்படியே உள்ளன.

இதை யாராலும் உடைக்க முடியாது. இன்று சமூக வலைதளங்கள் மூலமும் ஊடகங்கள் மூலமும் ஐக்கிய மக்கள் சக்தியை இரண்டாக உடைக்கும் பெரிய செயற்பாடு நடக்கிறது. ஆட்சி அமைப்பது தனிப் பணி என்றும், இந்தப் பள்ளத்தில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவது மற்றுமொரு தனிப் பணி இல்லையா என நான் கேட்கிறேன் அல்லது கட்சியை பிளவுபடுத்துவதா பிரதான பணி?.

அதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் இதில் ஈடுபடமாட்டார்கள். தெளிவான முடிவு எடுக்கப்பட்டே ஆதரவு வழங்க தீர்மானித்தோம். நாடாளுமன்ற முறை மூலம் ஆதரவு வழங்கு வோம். இந்த ஊடகங்கள் இவ்வாறு நடந்து கொள்வதையிட்டு வருந்துகிறேன்.

பத்திரிகையில் சிறிய பகுதியை போட்டு காலையில் இலத்திரனியல் ஊடகங்களிலும் ஒளிபரப்புகின்றனர். இதை நான் கண்டிக்க மாட்டேன், ஆனால் அரசியல் ரீதியாக நாம் கட்டமைத்த ஒன்று இருக்கிறது.

தயவு செய்து ஊடக நெறிமுறைகளை காக்க முயற்சியுங்கள். எமது கட்சியை பாதுகாத்து நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பதற்காகவுமே நாங்கள் உழைக்கிறோம். கீழ்தரமான ஊடக பாவனைகளை கைவிட்டு நெறிமுறைகளுடன் தகவல்களை வெளியிடுமாறு கூறுகிறேன் என தெரிவித்தார்.

## முச்சக்கரவண்டி கட்டணங்களில் அதிகரிப்பு



முச்சக்கரவண்டி கட்டணங்கள் கட்டுப்படுத்த முடியாதளவில் உயர்வதால், அதை கட்டுக்குள் கொண்டு வர உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கட்டணங்கள் அதிகரிக்கப் பட்டுள்ளதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

முச்சக்கரவண்டியில் முதல் கிலோமீற்றருக்கான கட்டணம் 120ரூபா எனவும், இரண்டாவது கிலோமீற்றருக்கான கட்டணம் 100ரூபா எனவும் இது இன்று முதல் அமுலுக்கு வருவதாகவும் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

தற்போது மொபைல் எப்ஸ் மூலம் இயக்கும் முச்சக்கரவண்டி ஓட்டுனர்களும், எப்ஸ் அல்லது மீற்றர்கள் மூலம் இயக்காதவர்களும் முதல் கிலோ மீற்றருக்கு கட்டணமாக 250ரூபா அறவிடுகிறார்கள்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக முச்சக்கர வண்டி கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு முதல் கிலோ மீற்றருக்கு 100ரூபா மற்றும் இரண்டாவது கிலோ மீற்றருக்கு 90ரூபா என நிர்ணயிக் கப்பட்டுள்ளது. ஆனால் மீற்றர் முச்சக்கர வண்டிகள் முதல் கிலோ மீற்றருக்கு 120ரூபா மற்றும் இரண்டாவது கிலோ மீற்றருக்கு 100ரூபா அறவிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே, வாகனத்தில் ஏறும் முன் கட்டணம் குறித்து விசாரிக்குமாறு தர்மசேகர மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

## நீர் மூழ்கி பெண்ணொருவர் உயிரிழப்பு

(ரஸீன் ரஸ்மின்)

ராஜாங்கனை நீர்த்தேக்கத்திற்கு அருகிலுள்ள கால்வாயில் நீராடச் சென்ற பெண் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ராஜாங்கனை பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கால்வாயில் குளிக்கச்சென்ற பெண் ணொருவர் நீரில் மூழ்கியநிலையில் அங்கிருந்தவர்கள் உடனடியாக தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும் அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தம்புத்தேகம வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தம்புத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆட்கடத்தலை கண்காணிக்க விசேட நடவடிக்கை



ஆட்கடத்தல்களுக்கு எதிரான நடவடிக்கை களுக்கு அதிக தாக்கத்தை உருவாக்குவதற்கும் நோக்கத்துடன் அரசு மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் திறனை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக 'சேவ் தி சைல்ட்' அமைப்பின் பிரதிநிதிகள் பங்கேற்புடன் தேசிய ஆட்கடத்தல் தடுப்பு பணிக்குழுவின் (NAHTTF) கூட்டமொன்று நேற்று முன்தினம் (17) பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்றது.

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் தேசிய ஆட்கடத்தல் தடுப்பு பணிக்குழுவின் தலைவர் சார்பாக, தேசிய புலனாய்வுப் பிரதானி மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்க (ஓய்வு) கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். திருமதி புத்தினி விதானா - சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் (சிறுவர் பாதுகாப்பு மற்றும் வணிகத்தில் சிறுவர் உரிமைகள்) மற்றும் சுசேத கோபல்லவ- சேவ் தி சைல்ட் அமைப்பின் மூத்த மேலாளர் (கடத்தல் எதிர்ப்பு) ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆட்களை கடத்துவதை (J/TIP) கண்காணிக்க அமெரிக்க வெளியுறவுத்துறை அலுவலகத்தின் நிதியுதவியுடன், இடப்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) இந்த மூன்றாண்டு திட்டத்தை ஆட்கடத்தல் தடுப்பு பணிக்குழு மற்றும் சேவ் தி சைல்ட் உள்ளிட்ட நான்கு சிவில் சமூக அமைப்புகளின் ஆதரவுடன் செயல்படுத்துகிறது.

## மாணவர்கள் உள்ளிட்ட 19பேர் மீது குளவிக்கொட்டு

(நடராஜா மலர்வேந்தன்)

பசறையில் பாடசாலையொன்றில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குளவிக்கொட்டுக்கு இலக் காகியுள்ளனர்.

மாணவர்கள் 16 பேரும் ஆசிரியர்கள் மூவர் உள்ளடங்களாக 19 பேர் இவ்வாறு குளவிகொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்கள், பசறை வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இச் சம்பவம் நேற்று (18) காலை இடம்பெற்றுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை வளாகத்தில் இருந்த குளவி கூடொன்று கலைந்ததால் மாணவர்களையும் ஆசிரியர்களையும் இவ்வாறு தாக்கியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு புதிய நேபாளத் தூதுவர் நியமனம்





கொழும்பைத் தளமாகக் கொண்ட இலங்கைகான நேபாளத்தின் முழு அதிகாரமுடைய மற்றும் சிறப்புத் தூதுவராக பாசு தேவ் மிஸ்ரா இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் நேபாள அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது தகுதிச் சான்றுகளை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்பு 01 இல் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் (17) சமர்ப்பித்தார்.



அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாணவர் போராட்டம் நேற்று (18) கொழும்பில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – பிரதீப் தம்பரகே)

# தனியார் நிறுவனமொன்றில் 21 மடிக்கணினிகள் திருட்டு

## இருவர் கைது – ஒருவருக்கு 23 வரை விளக்கமறியல்



வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத் தில் மடிக்கணினிகளை திருடிய சந்தேகநர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வத்தளை பிரதேசத்திலுள்ள தனியார் நிறுவன மொன்றின் களஞ்சியத்திலிருந்த 21 மடிக்கணினி கள் திரடப்பட்டுள்ளதாக வத்தளை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இதுதொடர்பில் வத்தளை பொலிஸ் நிலையத்தில் முன்வைக்கப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய, இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் கடந்த 16 ஆம் சந்தேகநபர்கள் இருவர் எலகந்த மற்றும் மாதின்னாகொட ஆகிய பிரதேசங்களில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ராகம பிரதேசத்தைச் சேர்ந்த 26 மற்றும் 32 வயதுடைய சந்தேகநபர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் சந்தேகநபர் ஒருவர் குறித்த தனியார் நிறுவனத்தில் ஊழியராக பணியாற்றியுள் ளதுடன் அவரினால் பல்வேறு சந்தர்ப்பங் களில் இவ்வாறு மடிக்கணினிகள் திருடப்பட்டுள் ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மற்றைய சந்தேகநபர் இந்த மடிகணினிகளை பணத்துக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் திருடப்பட்ட 13 மடிக் கணினிகள் தேடி கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (17) வெலிசரை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபட பட்டுள்ளனர். அதன்பின்னர் பிரதான சந்தேக நபரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளதுடன் மற்றைய சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வத்தளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஓகஸ்ட் 19ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# அரசின் சமாளிப்பு!

அடுத்த ஆறு மாதங்களுக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நாடு முழுவதிலும் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

இன்றைய நிலையில் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி அதை நடத்தி முடிப்பதற்கான கடப்பாடும், பொறுப்பும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அதைத் தேர்தல் ஆணையம் தவிர்க்கவோ புறமொதுக்கவோ முடியாது என்பதுதான் சட்ட ஏற்பாடு, ஒழுங்கு.

ஆனால் ஒழுங்குமுறைப்படி அத்தேர்தல் காலம் பிந்தாமல் நடத்தப்படுமா? அதை அப்படிச் செய்யாமல் விடுவதற்கு சட்டத்தில் வாய்ப்பு மற்றும் ஓட்டை ஏதும் உண்டா என்பதே கேள்வி.

இன்றைய நிலையில் சட்டத்தில் அப்படி ஒத்திவைக்கவோ, தள்ளிவைக்கவோ இடமில்லை. அடுத்த ஆறு மாதத்துக்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவே வேண்டும். திட்டவட்டமான தெளிவான சட்ட ஏற்பாடுகள் இதற்கு உண்டு. புறக்கணிக்க முடியாத கட்டாயம் அது.

நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் அவற்றுக்குரிய உச்சப் பதவி நீடிப்பில் இருக்கின்றன. சட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் அவற்றின் பதவிக் காலத்தை அடுத்த பெப்ரவரி - மார்ச் மாதம் வரை உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் நீடித்துள்ளார்.

உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத்தின் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையகத்துக்கு தன்பாட்டில் வந்துவிடும். அதுதான் சட்ட ஏற்பாடு. அதன்படி, அடுத்த மாதம் செப்டெம்பர் 20ஆம் திகதிக்குப் பின்னர், அடுத்த ஆண்டு மார்ச் 20ஆம் திகதி வரையான 6மாத காலத்துக்குள் உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு.

தேர்தல் ஆணையம் அப்படித் தேர்தலை நடத்துவதை தற்போதைய ஏற்பாடுகளின்படி அரசுத் தலைமை தடுக்கவும் முடியாது. அந்தப் பொறுப்பைத் தேர்தல் ஆணையம் செய்யாமல் விடவும் முடியாது.

ஆனால், வழக்கமாகவே அதிகாரத்துக்கு, பதவிக்கு வந்த பின்னர் தேர்தலை நடத்தவோ, மக்களைச் சந்திக்கவோ அஞ்சும் ரணில் விக்கிரமசிங்கதான் இப்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருக்கின்றார். அவர் பிரதமராக இருந்த நல்லாட்சி அரசு இதே காரணத்துக்காகத்தான் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல், ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை இரத்துச் செய்தது. அது இன்னமுமே நடத்தப்படாமல் வருடங்கள் கடந்து இழுபடுகின்றது.

இப்போதும் கூட, பொருளாதார நெருக்கடியைக் காரணம் காட்டி, இச்சமயத்தில் தேர்தல் நடத்த முடியாது என்று வியாக்கியானம் கூறி, புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வந்து, உள்ளூராட்சித் தேர்தலுக்கும் ஆப்படிக்கப்படலாம். அதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.

அரசமைப்பு ஏற்பாடுகளின்படி, மக்கள் தமது இறைமையைப் பிரயோகிக்கும் தேர்தல்களாக ஜனாதிபதித் தேர்தல், சர்வசன வாக்கெடுப்பு, பொதுத் தேர்தல் ஆகியவை மட்டுமே கருதப்படுகின்றன. மாகாண சபைத் தேர்தலையும் அந்தப் பட்டியலில் சேர்க்கலாம் என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று கூறுகின்றது.

மக்கள் தங்கள் இறைமையைப் பிரயோகிக்கும் ஒரு தேர்தலாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் கருதப்படாமையினால் சாதாரண நாடாளுமன்றப் பெரும்பான்மை மூலம் புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றி, அதனை நடத்தாமல் அரசு ஒத்திவைக்க முடியும் என்கின்றன சட்டவட்டாரங்கள்.

வலுவாக தமது அரசியல் நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்த முன்னர், தேர்தல் ஒன்றைச் சந்திக்க விரும்பாத ஜனாதிபதி ரணில் பெரும்பாலும் அதைத்தான் செய்வார்.

ரணிலின் ஆட்சியை பொறுத்தவரை உள்ளூராட்சித் தேர்தலுக்கு செல்ல முன்னர் மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும் முடிவொன்றை எடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறது. நீண்டகாலம் நடத்தப்படாமல் இருக்கும் அந்த தேர்தலை நடத்துவதிலும் இழுத்தடிப்பினைசெய்ய முடியாது. ஆனாலும் ரணிலைப் பொறுத்தவரை தனது அரசியல் அதிகாரத்தினை உறுதிப்படுத்தியபின்னரே தேர்தலுக்குச் செல்வார். தேர்தல் என்பது இப்போதைக்கு ஒரு சமாளிப்புக்கேஷன். அவ்வளவுதான்.

# இந்திய அரசும் இலங்கைத் தமிழர் நலனும்!

**வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன்**



இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதென்று உலக சமுதாயம் அறிந்ததே. உலகின் சொர்க்க பூமி என்றும் இந்து மகாக்கடலின் முத்து என்றும் வரலாற்றில் அறியப்பட்டது இலங்கைத் தீவு. 103 நதிகள், 16ஜீவநதிகளை கொண்டது. இலங்கை, இயற்கை துறைமுகங்கள், கடலால் சூழப்பட்ட அழகான பூங்காவனத் தீவாகும். உலக மக்களை சுற்றுலாவில் எட்டுத் திக்கும் ஈர்க்கக்கூடிய பூமி. மலையகத்தில் விளையும் அரிய தேயிலை, உலக நாடுகளுக்கு வேண்டி விரும்பி ஏற்றுமதி செய்கின்ற சூழ்நிலையும் இருந்தது. செழிப்பான, வளமான விவசாய பூமி, இரத்தினக் கற்கள், காரீயம், வாசனைப் பொருட்கள், தேயிலை, சுற்றுலா, மீன்பிடி என்ற வளமான பூமி ஆசியாவில் சிங்கப்பூரை விட எளிதாக முன்னேறியிருக்க வேண்டும். சிங்கப்பூர் கடல் மண்ணை பரப்பி பரப்பி பல சிரமங்களை நேர்கொண்டு உலகில் முன்னேறியது.

ஏன் இவ்வளவு இயற்கை வளங்கள் இருந்தும் இலங்கை சிங்கப்பூரை தாண்டி ஆசியாவில் முன்னேறவில்லை என்பது முக்கியமான விடயம். இயற்கையின் அருட்கொடை இலங்கைக்கு சாதகமாக இருந்தும் விடுதலைப் பெற்று 74ஆண்டுகளில் பொருளாதார ரீதியாக தத்தளிக்கின்றது. இதன் காரணம் என்ன, அரசில் உள்ள பணம் அனைத்தையும் நாட்டின் வளர்ச்சிக்கு செலவு செய்யாமல் அயல்நாடுகளில் இருந்து கடன் வாங்கி தமிழர்களை அழிக்கும் ஒரே திட்டமாக 1948 இலங்கை விடுதலை பெற்ற காலத்தில் இருந்து சிங்கள ஆட்சியாளர்கள் இராணுவத்திற்கு வழங்கி தமிழினத்தை அழிக்கும் ஒரே கடமையைச் செய்தார்கள். நாட்டின் வளர்ச்சி, முன்னேற்றம் என்பதில் சிங்களவர்களுக்கு அக்கறை இல்லை.

பொருளாதாரச் சிக்கலில் இன்றைக்கு இலங்கை பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதை மறுப்பதற்கு இல்லை. அதிலிருந்து இலங்கை விடுபட வேண்டும் என்பது தான் உலக சமுதாயத்தின் கருத்து.

இலங்கையில் படிப்படியாக இயற்கை விவசாயம் என்று கொண்டுவராமல் ஒரே நாளில் இரசாயன உரங்களைப் பயன்படுத்தக் கூடாது என்ற நிர்ப்பந்தத்தின் காரணமாக விவசாயம் அழிந்து பொருளாதார சிக்கல் ஏற்பட்டது. அரிசி, காய்கறிகள், புகையிலை, மிளகாய், வெங்காயம் எல்லாம் விவசாய உற்பத்தியில் இல்லாமல் போய்விட்டது. இப்படி தொலைநோக்குப் பார்வை இல்லாமல் தமிழர் விரோத மனப்பான்மையில் சிங்கள ஆட்சியாளர்கள் தங்களுக்குத் தானே கொள்ளிக்கட்டையை வைத்துக் கொண்டனர்.

பொருளாதாரச் சிக்கல் என்று கடந்த 74 ஆண்டுகளாக தமிழர்கள் போராடியதை மறக்கவும் முடியாது, புறந்தள்ளவும் முடியாது. பொருளாதாரச் சிக்கல் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் காலத்தில் இலங்கை மண்ணில் தொடர்ந்தது கவனத்தில் கொள்ள வேண்டும். தமிழர்களின் போராட்டங்களை இனி எப்படி கவனிக்க வேண்டும் என்பதையும் உலக சமுதாயமும், இந்திய அரசும் கவனிக்க வேண்டும்.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருவதையும், 16ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கேயர், டச்சு மற்றும் ஆங்கிலேயர்களின் படையெடுப்பு வரை தீவில் தனித்தனி இறைமையுள்ள தமிழ், சிங்கள அரசுகள் இருந்ததையும் ஒப்புக்கொண்டு, மற்றும் 1833இல் மட்டுமே, ஆங்கிலேயர்களால் நிர்வாக வசதிக்காக முழுத் தீவும் ஒன்றுபட்டது.

கடந்த 1911, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சொத்து-கல்வி என்ற தகுதியில், மொத்தம் 2934 வாக்காளர்கள் கொண்ட தேர்தலில் சிங்களவர்கள் யாரும் வெற்றிபெறவில்லை. அந்தத் தேர்தலில் தமிழரான சேர்.பொன்னம்பலம் ராமநாதன் வெற்றிபெற்றார். அவரை எதிர்த்த சிங்கள மருத்துவர் எஸ்.மார்க்கோஸ் பெர்னாண்டஸ் போட்டியிட்டு தோல்வியடைந்தார். ஒரு காலத்தில் சிங்களவர்களுக்கு நிகரான வடக்கு-கிழக்கு மரபு ரீதியான தமிழர்கள், மலையகத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் சேர்ந்து சிங்களவருக்கு சமமாக மக்கள் தொகையை கொண்டிருந்தனர். சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு பின் சரிபாதியாக இருந்த மக்கள் தொகை படிப்படியாக குறைந்தது. இன்றைக்கு இரண்டாம் தரமாக சரிசமமற்ற நிலையில் தமிழர்கள் சிங்களவர் ஆட்சியில் நடத்தப்படுகின்றனர்.

கடந்த 1948இல் ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்றபோது ஈழத் தமிழர்கள் சுயநிர்ணய உரிமைகளைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதையும், இலங்கைக்கான சுதந்திரம் ஈழத் தமிழர்களுக்கு முறையற்ற மற்றும் முழுமையற்ற காலனியாதிக்கமாகும் என்பதே தொடர்ந்தது.

1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற உடனேயே இலங்கை தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையை ஆரம்பித்ததையும், ஈழத்தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளுக்காக முதலில் அஹிம்சை வழியிலும், பின்னர் ஆயுதப் போராட்டத்தின் மூலமும் போராடினர்.

விடுதலையின்போது இலங்கையின் சனத்தொகையில் 33% தமிழர்கள் இருந்ததை நினைவுகூர்ந்து, விடுதலை கிடைத்த உடனேயே, தமிழர்களுக்கு எதிரான முதல் நடவடிக்கையாக, சிங்கள மொழி, மலையகத் தமிழர்களின் பிரஜா உரிமை என்ற ஆணைகள் கொண்டுவரப்பட்டு கிட்டத்தட்ட 1மில்லியன் தமிழர்களுக்கு குடியுரிமை மறுத்தது. மலையகத்தில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர்களால் தமிழகத்திலிருந்து அழைத்துச் சென்றவர்களின் வாழ்வு சூன்யமானது.

சிங்கள இனம் தமிழருக்கு எதிராக பௌத்தத்தில் திரிபுவாதமாக தேசிய சிந்தனை என்று பௌத்தத்திற்கு எதிராக இனவாத மகாவம்சத்தை கல்வியிலும் நடைமுறையிலும் புகுத்தி இனவாதத்தை வலுப்படுத்தியது. 1956, 1958, 1977, 1981, மற்றும் 1983ஆம் ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் ஈவு இரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர்.

அனைத்து பிரதான தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் கீழ் ஒன்றிணைந்து, 1976ஆம் ஆண்டு மே 14 அன்று வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிறைவேற்றி, தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தமிழர்களின் நாடு (ஈழம்) அமைய வேண்டும் என தீர்மானித்தனர். பின்னர் நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு அமோகமான ஆணையை வழங்கினர்.

1981ஆம் ஆண்டு மே 31 அன்று சிங்கள ஆட்சியாளர்கள் யாழ். பொது நூலகத்தை எரித்ததை மறக்க முடியுமா? கடந்த 1983இல் தமிழர் பகுதியில் நடந்த கலவரம், இனப்படுகொலையைப் பார்த்து உலகமே கண்ணீர் விட்டது.

கடந்த 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட போது, தமிழ்ப் போராளிகள் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு இந்தியா உத்தரவாதம் அளித்ததுடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது என்பதை உறுதிப்படுத்துகிறது.

ஆனால், அது நடக்கவில்லை. இந்த ஒப்பந்தத்தில் உறுதிகொடுத்தவாறு சிங்கள அரசின் நடவடிக்கைகள் இல்லை. மாகாண சபைகள் என உறுதியளிக்கப்பட்டது, அதிகாரமற்ற சபைகளாகவே ஒப்புக்கு ஏற்படுத்தப்பட்டது.

ஐ.நா. பொதுச்செயலாளரின் (2011 மார்ச்) பொறுப்புக்கூறல் தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கை, இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான ஆயுத மோதலின் இறுதிக்கட்டத்தின் போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் இழைக்கப்பட்டதாக நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டனர் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின்போது இலங்கையில் ஐ.நா. நடவடிக்கை குறித்த ஐ.நா. பொதுச்செயலாளர் உள்ளக மீளாய்வுக் குழுவின் நவம்பர் 2012 அறிக்கையின்படி, 70,000க்கும் அதிகமானோர் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியுள்ளது. மன்னார் ஆயர் மறைந்த டாக்டர் ராயப்புவின் அறிக்கையிலும், 2009இல் இனப் போரின் முடிவில் 1,46,679க்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கணக்கில் வரவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற UNHRC அமர்வில் 30/1 தீர்மானத்திற்கு இலங்கை நம்பகமான விசாரணையை நடத்துவதற்கு தன்னை அர்ப்பணித்து, மேலும் இரண்டு தீர்மானங்கள் மூலம் 2017 மார்ச் மற்றும் 2019 மார்ச்சில் கால நீடிப்புகளைப் பெற்றது. ஆனால் தாமதப்படுத்தும் தந்திரோபாயங்களை விளையாடிய பின்னர், 2020 பெப்ரவரியில் அனைத்து UNHRC தீர்மானங்களில் இருந்தும் இலங்கை விலகியது,

மேலும் அவர்களது போர்க்குற்றவாளிகளை போர்வீரர்கள் என்று அழைக்கும் எந்த விசாரணையையும் நடத்த மறுத்தது.

இலங்கை அரசும் அதன் தலைவர்களும் தமிழ் மக்களுக்கும், இந்திய அரசுக்கும் மற்றும் அதன் அரசுக்கும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் அர்ப்பணிப்புகளில் தொடர்ச்சியாக உலக சமுதாயத்திற்கு கொடுத்த உறுதிமொழிக்கு மாறாக சிங்கள ஆட்சியாளர்கள் பின்னோக்கிதான் சென்றுள்ளனர்.

இனப்போர் முடிந்து 13 ஆண்டுகளுக்கு மேலாகியும், தமிழர் பிரதேசம் இலங்கை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு, தமிழ் மக்கள் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வருவதாகவும், இலங்கை அரசு திட்டமிட்ட வகையில் நில அபகரிப்பு, அழிவுகளில் ஈடுபட்டு வருவதாகவும் வலியுறுத்தினார். மற்றும் 300க்கும் மேற்பட்ட இந்துக் கோவில்கள் அழிப்பு, அவற்றின் நிலங்கள் மற்றும் சூழல்களை நாசப்படுத்த மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் பௌத்த விகாரைகளை கட்டியெழுப்புவதில் ஈடுபட்டு சனத்தொகையை மாற்றும் நோக்கத்துடன் தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தின் தொடர்பை உடைக்க வேண்டும்.

இந்திய - சீனப் போர், இந்திய - பாகிஸ்தான் போர், 1971இல் பாகிஸ்தான் - வங்காளதேசம்/இந்தியா - பாகிஸ்தான் போரின்போது பாகிஸ்தானின் பக்கம் நின்றதால், இலங்கை தனது போர் விமானங்களுக்கு கொழும்பில் எரிபொருள் நிரப்ப அனுமதித்ததன் மூலம், இந்தியாவை முழுமையாகவும் நேர்மையாகவும் செயல்படுத்தத் தவறியதால், இலங்கை வரலாற்று ரீதியாக இந்தியாவுக்கு எதிரானது என்பதை வலியுறுத்துகிறது.

1987இன் இலங்கை ஒப்பந்தம், கொழும்பு கிழக்கு துறைமுக முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான இந்தியா - ஜப்பான் - இலங்கை ஆகிய மூன்று தரப்பு ஒப்பந்தத்தில் இருந்து 2021பெப்ரவரியில் ஒருதலைப்பட்சமாக விலகிக்கொண்டது. ஆனால், ஈழத்தமிழர்கள் செல்வா காலத்தில் சீனப் போரின்போது நிதி திரட்டி, அன்றைய பிரதமர் நேருவுக்கு போர் நிதியாக அனுப்பியதை நினைவில் கொள்ள வேண்டும்.

(7ஆம் பக்கம் பார்க்க)

## நக்கல் நமசிவாயம்

என்னப்பா இது.. ஜனாதிபதியா இருந்த ஒருத்தர் விசா ஒண்டை எடுக்க முடியாம இப்படித் தடுமாறுறார்...

உந்த தமிழ்ப்பெடியங்களிட்ட சொன்னால் வெளிநாடு போறதுக்கு நல்ல ஐடியா ஒண்டை குடுப்பாங்கள்...



## இன்றைய நாளில்...

✱1839 – லூயி தாகர் கண்டுபிடித்த புகைப்பட செயல்முறையை "உலகத்துக்கு அன்பளிப்பாக வழங்குவதாக" பிரெஞ்சு அரசு அறிவித்தது.

✱1866 – இலங்கையில் முதல் தடவையாக தந்திச் செய்தி நியூயோர்க்கில் இருந்து காலி நகரை வந்தடைந்தது.

✱1895 – கொழும்பு தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.

✱1960 – ஸ்புட்னிக் திட்டம்: சோவியத்தின் ஸ்புட்னிக் 5 விண்கலம் பெல்கா, ஸ்திரெல்கா என்ற இரு நாய்களையும், 40 சுண்டெலிகளையும், 2 எலிகளையும், பல வகைத் தாவரங்களையும் விண்ணுக்குக் கொண்டு சென்றது.

✱1964 – சின்கொம் 3 என்ற முதலாவது புவிநிலை தகவற் செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

✱1978 – ஈரானில் திரையரங்கு ஒன்று தீப்பிடித்ததில் 400இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

# அடுத்த வாரம் புதிய அமைச்சரவை; பெரமுனவில் 16 பேருக்கு வாய்ப்பு

## ஜீவன், அதாவுல்லாவும் உள்ளடக்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் புதிய அமைச்சரவை அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ள நிலையில், புதிய அமைச்சரவை அடுத்தவாரம் நியமிக்கப்படவுள்ளது.

இந்த அமைச்சரவையில் இடம்பெறுவதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் பெயர் விபரம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

ரமேஷ் பத்திரண, பிரசன்ன ரணதுங்க, ஜனக்க பண்டார தென்னகோன், கெஹேலிய ரம்புக்வெல்ல, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, சீ.பி.ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, எஸ்.எம்.சந்திரசேன, நாமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, சனத் நிஷாந்த, காஞ்சன விஜேசேகர ஆகியோரின் பெயர்கள் பொதுஜன பெரமுனவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் சிலரும் அமைச்சரவையில் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோருக்கும் அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன.

# வீட்டை விட்டு வெளியேறிய சிறுமிகள் மீது தகாத உறவு

## யாழில் ஐவருக்கு விளக்கமறியல் உத்தரவு

(யாழ். செய்தியாளர்)

யாழில் 17 வயது சிறுமிகள் இருவரை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் உட்பட ஐவரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், வீட்டைவிட்டு வெளியேறி துர்நடத்தையில் ஈடுபட்ட சிறுமிகள் இருவரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் கட்டளையிட்டது.

இந்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில், சிறுமிகள் இருவரும் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவரும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவுகள் வழங்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டதாவது,

இரண்டு வாரங்களுக்கு முன்னர் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுமிகள் இருவர் வீட்டிலிருந்து வெளியேறி வந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்துள்ளனர்.

அவர்கள் தொடர்பில் அறிந்த ஆண் ஒருவர், சிறுமிகள் இருவரையும் அழைத்துச்சென்று சாவகச்சேரியிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளார்.

எனினும், நேற்றுமுன்தினம் அந்த விடுதியிலிருந்து வெளியேறிய மூவரும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு வந்துள்ளனர்.

அன்றைய தினம் இரவு வாகனம் ஒன்றில் பஸ் சாரதிகள் இருவர், நடத்துநர்கள் இருவர் என மேலும் நால்வர் இணைந்து வாகனம் ஒன்றில் எழுதுமட்டுவாழ் பற்றைக்காட்டுக்குள் அழைத்துச் சென்றுள்ளனர். அதன்போது சிறுமி ஒருவர் சாதுரியமாகப் பேசி வாகனத்திலிருந்து இறங்கி எழுதுமட்டுவாழில் மக்கள் வாழும் பகுதிக்கு வந்துள்ளார்.

வீதியில் சென்றவர்களிடம் நடந்தவற்றை தப்பிவந்த சிறுமி தெரிவித்த நிலையில் பொலிஸ் அவசர பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

மற்றைய சிறுமியுடன் சென்ற ஐவரும் மறுநாள் யாழ்ப்பாணம் நகருக்கு அழைத்து வந்து சிறுமியை இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிறுமிகளிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர்களை கடத்திச் சென்றமை மற்றும் தகாத உறவு கொண்டமை என்ற குற்றச்சாட்டுகளின்கீழ் ஐவர் கைதுசெய்யப்பட்டனர்.

வீட்டைவிட்டு வெளியேறி வந்து துர்நடத்தையில் ஈடுபட்டமையினால் சிறுமிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

# மண்சரிவு ஏற்படுவதால் பொத்துபிட்டிய வீதி பாதிப்பு



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இறக்குவானை - பொத்துபிட்டிய வீதியில் பல இடங்களிலும் மண்திட்டுகள் அல்லது பாரிய கற்கள் பிரதான வீதியில் சரிந்து விழுவதால் அடிக்கடி போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக, மழை காலங்களில் இந்நிலைமை ஏற்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மலைப்பாங்கான வீதி என்பதால் மக்கள் அச்சத்துடனேயே பயணங்களை மேற்கொள்கின்றனர். இந்த வீதியில் ஆபத்தான இடங்களை அடையாளங்கண்டு பாரிய கற்பாறைகள் அகற்றப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யானை தாக்கி பாகன் உயிரிழப்பு

திஸ்ஸமஹாராம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரஜமகா விகாரையில் வளர்க்கப்பட்டுவரும் யானையின் தாக்குதலுக்குள்ளான பாகன் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அன்றைய தினம் யானையை ஆற்றுக்கு அழைத்துச்செல்ல முற்பட்டவேளை, திடீரென பாகன் மீது தாக்கியுள்ளது. கடும் காயங்களுக்குள்ளான பாகன் தெபரவெவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் குருவிட்டவைச் சேர்ந்த 23 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

# சிறப்புத் தேர்ச்சிபெற்ற உயர்தர மாணவர்களுக்கு பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தால் புலமைப்பரிசில் வழங்கிவைப்பு







(அஷ்ரப் ஏ சமத்)

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தால் சிறப்புத் தேர்ச்சிபெற்ற இலங்கை உயர்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவம், அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த 14ஆம் திகதி கொண்டாடப்பட்ட பாகிஸ்தானின் 75ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு இந்த விழா நடைபெற்றது. 2006ஆம் ஆண்டுமுதல் உயர்தர மற்றும் சாதாரண தரம் பயின்ற மாணவர்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கத்தினால் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இதுவரை சுமார் 2,300 இலங்கை மாணவர்கள் ஜின்னா புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு நிலை) உமர் பாரூக் பர்கி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இங்கு உரையாற்றிய உயர்ஸ்தானிகர் தெரிவித்ததாவது,

சிறந்த கல்வி வாய்ப்புகளுடன் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதில் இலங்கையின் பெருமைமிக்க பங்காளியாக பாகிஸ்தான் திகழ்வதாகவும், மருத்துவம், பல் மருத்துவம், மருந்தியல் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் பாகிஸ்தான் தொழில்நுட்ப உதவித் திட்டம் (PTAP) மற்றும் அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் உட்பட பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களின் கீழ் பாகிஸ்தான் அரசாங்கம் 1976ஆம் ஆண்டு முதல் இலங்கை மாணவர்களுக்கு உயர்கல்வி புலமைப்பரிசில்களை வழங்கி வருவதாகவும் அவர் தனது வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தனது உரையில், பாகிஸ்தான் அரசாங்கத்தின் இப்புலமைப்பரிசில் திட்டத்தை பாராட்டியதோடு ஜின்னா புலமைப்பரிசில் திட்டத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களையும் பாராட்டினார். மேலும் அவரது உரையில், பாகிஸ்தான் நாட்டின் உருவாக்கத்திற்கு காரணமான பாகிஸ்தானின் தேசிய தந்தை குவாய்த் -இ-ஆசாம், முஹம்மது அலி ஜின்னாவுக்கு தமது மரியாதையை செலுத்தியதோடு, இந்த புலமைப்பரிசில்கள் இலங்கையிலுள்ள சகல இன மாணவர்களுக்கும் எவ்வித பாரபட்சமின்றி வழங்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும் எனவும் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவுகளை நினைவுகூர்ந்த அவர், 2006ஆம் ஆண்டுமுதல் பல இலங்கை மாணவர்களுக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் புலமைப்பரிசில் மற்றும் உயர்கல்வி பயில்வதற்காக பாகிஸ்தானில் வசதி அளிப்பது குறித்து பயனளித்துவரும் ஜின்னா புலமைப்பரிசில் திட்டத்தைப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

# கல்ஹின்னையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வு



(இக்பால் அலி)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசத்தைக் கட்டி எழுப்புகின்ற செயற்றிட்டத்தின் கீழ் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு கல்ஹின்னையில் அண்மையில இடம்பெற்றது.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசத்தைக் கட்டி எழுப்புகின்ற செயற்றிட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் இரத்த தானம் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் கல்ஹின்னை வை.எம்.எம்.ஏ. கிளையின் ஏற்பாட்டில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு கல்ஹின்னை அல்-மனார் ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்றது.

கல்ஹின்னை வை.எம்.எம்.ஏ. கிளையின் தலைவர் மபாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி கலந்துகொண்டு சிறப்பித்தார்.



பௌத்த மத குரு ஜி. விமலானந்த தேரர் முதல் முதலாக தனது இரத்தத்தை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

இதில் பூஜாப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர் ரசான், ஊர்ப் பிரமுகர்கள், நூற்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம், சிங்கள இளைஞர்கள் யுவதிகள் கலந்து கொண்டு இரத்தம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 18.08.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 134 75 | 146 7 45 |
| கனேடியன் டொலர் | 163 3670 | 176 4886 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 6484 | 43 8604 |
| யூரோ | 250 7842 | 266 102 |
| ஜப்பான் யென் | 1 5278 | 1 6354 |
| சிங்கப்பூர் டொலர் | 145 7488 | 157 053 |
| ஸ்ரேலிங் பவுன் | 317 3072 | 334 80 |
| சுவிஸ் பிரான்ங் | 262 1075 | 28 8430 |
| ஐ.அ.டொலர் | 246 2256 | 257 6 27 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 34 7 |
| குவைட் | குவைட் தினார் | 0,065 275 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 47 7 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 47 7 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 0356 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1637 |

# கொரிய மொழிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இணையத்தில்

## எதிர்வரும் 22 முதல் 26ஆம் திகதிவரை வழங்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவிப்பு

தென்கொரியாவில் மீன்பிடித்துறையில் வேலைவாய்ப்புக்கான கொரிய மொழிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 22ஆம் திகதிமுதல் 26ஆம் திகதிவரை இணையவழியூடாக வழங்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு கடவுச்சீட்டு கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரையிலும் அதனைப் பெறாத விண்ணப்பதாரர்களுக்கு குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் இணைந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் விசேட நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பணியகத்தின் மாகாண அலுவலகங்கள் ஊடாக இம் மாதம் 15, 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் அத்தகைய தொழிலை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு பொருத்தமான பரிந்துரை கடிதங்கள் வழங்கப்படுகின்றன.

இந்தப் பரிந்துரைக் கடிதங்களைப் பெறுவதற்கு பரீட்சைக் கட்டணமாக அறவிடப்படும் 10,109 ரூபாவை குறித்த அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்த வேண்டும்.

இந்த பரிந்துரைக் கடிதத்தை பத்தரமுல்லையிலுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பித்து ஒரு நாள் சேவையின் ஊடாக கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன், ஏற்கனவே கடவுச்சீட்டை பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு இந்த நடைமுறை பொருத்தமற்றது.

மேலும் அவர்கள் ஒன்லைன் ஊடாக பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை ஸ்கேன் செய்து அனுப்புவதன் மூலம் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர்



(கண்டி நிருபர்)

மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக மிஹிரான் பண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக்கடித்ததை மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் வைத்து நேற்று முன்தினம் கையளித்தார்.

மிஹிரான் பண்டார இலங்கை நிர்வாக சேவையின் 2ஆம் தர அதிகாரியாகும்.

# 2026ஆம் ஆண்டு இலங்கையில் ஐ.சி.சி. ரி20 உலகக்கிண்ணம்

2023 - 2027ஆம் ஆண்டு வரையிலான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டதற்கமைய 2026ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரை இணைந்து நடத்தும் உரிமை இலங்கைக்கு கிடைத்துள்ளது. அதன்படி அந்த ஆண்டு இருபதுக்கு 20 உலகக்கிண்ணத்தை இலங்கையும் இந்தியாவும் இணைந்து நடத்தவுள்ளன.

முன்னதாக இது தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், தற்போது 2023 - 2027ஆம் ஆண்டு வரையிலான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளின் அட்டவணை வெளியிடப்பட்டதையடுத்து இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரை மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து நடத்தவுள்ளன.



# 131 சர்வதேச போட்டிகளில் விளையாடும் இலங்கை அணி

சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் வெளியிடப்பட்ட 2023 முதல் 2027ஆம் ஆண்டுவரையான சர்வதேச கிரிக்கெட் போட்டி அட்டவணையின்படி இலங்கை கிரிக்கெட் அணியானது, 25 டெஸ்ட் போட்டிகள், 52 ஒருநாள் சர்வதேச போட்டிகள் மற்றும் 54 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகள் என மொத்தமாக 131 போட்டிகளில் விளையாடவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையில் முழுமையாக அங்கம் வகிக்கும் 12 நாடுகள் குறிப்பிட்ட 4 வருடங்களைக்கொண்ட சுழற்சி பருவகாலத்தில் முன்னரைவிட அதிக எண்ணிக்கையிலான போட்டிகளில் விளையாடவுள்ளன. இக்காலப்பகுதியில் 12 நாடுகளும் மொத்தமாக 777 சர்வதேச போட்டிகளில் விளையாடும். இதில் 173 டெஸ்ட் போட்டிகள், 281 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள், 323 சர்வதேச இருபது 20 கிரிக்கெட் போட்டிகள் அடங்குகின்றன.

நடப்பு 4 வருட சுழற்சி பருவகாலத்தில் விளையாடப்படும் 694 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளைவிட அடுத்த பருவகாலத்துக்கான போட்டிகளின் எண்ணிக்கை அதிகமாகும்.

**TEAM-WISE MATCHES IN 2023-27 MEN'S FTP CYCLE***

| TEAM | TESTS | ODIS | T20IS | TOTAL |
|---|---|---|---|---|
| Afghanistan | 21 | 45 | 57 | 123 |
| Australia | 40 | 43 | 49 | 132 |
| Bangladesh | 34 | 59 | 57 | 150 |
| England | 43 | 48 | 51 | 142 |
| India | 38 | 42 | 61 | 141 |
| Ireland | 12 | 51 | 47 | 110 |
| New Zealand | 32 | 46 | 57 | 135 |
| Pakistan | 27 | 47 | 56 | 130 |
| South Africa | 28 | 39 | 46 | 113 |
| Sri Lanka | 25 | 52 | 54 | 131 |
| West Indies | 26 | 48 | 73 | 147 |
| Zimbabwe | 20 | 44 | 45 | 109 |

* Excludes 4+ team tournaments and tri-series finals

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# திருநங்கையாக மாறிய அவுஸ்திரேலிய ஒலிம்பிக் வீரர்

ஒலிம்பிக் ரக்பி செவன்ஸ் தங்கப் பதக்கம் வென்ற எலியா கிரீன் ஒரு திருநங்கையாக வெளிவந்துள்ளார். மேலும் இது அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற மற்றவர்களுக்கும் உதவும் என்று நம்புகிறார்.

ரியோ 2016 ஒலிம்பிக்கில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணியின் வீரரான கிரீன், ஒட்டாவாவில் நடந்த டிரான்ஸ்போபியா மற்றும் ஓரினச்சேர்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பிங்காம் கிண்ண சர்வதேச உச்சிமாநாட்டில் உரையாற்றினார்.

''எனது ரக்பி வாழ்க்கை முடிவுக்கு வந்ததும் நான் இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரிந்த அடையாளத்திலும் உடலிலும் என் வாழ்நாள் முழுவதும் வாழ்வேன் என்று நானே உறுதியளித்தேன். எனக்கு அந்த அறுவை சிகிச்சையின்போது அது மிகவும் விடுதலையான உணர்வாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். மேலும் நான் இருக்கவேண்டும் என்று எனக்குத் தெரியும். பேய்களை எதிர்கொள்ளும் இந்த இருண்ட காலங்களில் அது என் மனதில் ஒரு பிரகாசமான தீப்பொறி. ஆனால் சுரங்கப்பாதையின் முடிவில் வெளிச்சம் இருப்பதை நான் அறிந்தேன்'' - என்று கிரீன் கூறினார்.



# மியன்டாட் இளையோர் அணியை வீழ்த்தி சன்பிளவர் இளையோர் அணி சம்பியன்

(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது மியன்டாட் இளையோர் அணியின் புதிய சீருடை அறிமுகக் கண்காட்சி கிரிக்கெட் போட்டி சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் சாய்ந்தமருது சன் பிளவர் விளையாட்டுக் கழக இளையோர் அணி, போட்டியை ஏற்பாடுசெய்த சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழக இளையோர் அணியினரை 6 விக்கெட்டுகளினால் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தையும் கைப்பற்றியது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற சாய்ந்தமருது மியன்டாட் இளையோர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 18 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றது. 130 ஓட்டங்கள் வெற்றி இலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பாடிய சன்பிளவர் இளையோர் அணி 13.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலகுவான முறையில் அபார வெற்றியைப் பெற்றுக்கொண்டது.



போட்டியின் ஆட்டநாயகனாக சன்பிளவர் இளையோர் அணியின் தலைவர் என்.எம்.சபீர் தெரிவாகியதுடன், மியன்டாட் இளையோர் அணியின் சீருடை அறிமுக வெற்றிக் கிண்ணத்தை சன்பிளவர் இளையோர் அணி கைப்பற்றியது.

# கட்டார் சஃபாரி மால் நடத்தும் புகைப்படப் போட்டி; சாய்ந்தமருது இளைஞரின் புகைப்படமும் தெரிவு






(நூருள் ஹுதா உமர்)

கட்டார் சஃபாரி மால் நடத்தும் "FRAMES SEASON 5" புகைப்படப் போட்டியில் இலங்கை சாய்ந்தமருதைச் சேர்ந்த இளைஞர் ஜே.எம்.பாஸிதின் புகைப்படமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இவர் சிறுவயதிலிருந்து டிஜிட்டல் மற்றும் புகைப்படத்துறையில் ஆர்வம் கொண்டவர். இவர் பல போட்டிகளிலும் பங்குபற்றியுள்ளார்.

இப்புகைப்படப் போட்டியில் சுமார் 500இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். அதில் தெரிவுசெய்யப்பட்ட முப்பது புகைப்படங்கள் ஓகஸ்ட் 17 தொடக்கம் ஓகஸ்ட் 30 வரை கட்டார் அபு ஹமூரிலுள்ள சஃபாரி மாலில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியில் மக்களால் புகைப்படங்களுக்கு வாக்களித்து மூன்று வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

முதலாவது வெற்றியாளருக்கு 3,000 ரியால், இரண்டாவது வெற்றியாளருக்கு 2,000 ரியால், மூன்றாவது வெற்றியாளருக்கு 1,000 ரியால் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் என இரண்டு பிரிவுகளில் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன.

இதில் பல நாடுகளிலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சீமெந்து ஏற்றுவதற்கான கட்டணத்தை வரையறுக்கும் கல்முனை மாநகர சபை

(சாய்ந்தமருது நிருபர்)



கல்முனை மாநகர சபை எல்லையினுள் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் சீமெந்து பொதிகளை ஏற்றுவதற்கான அதிகூடிய வாகன வாடகைக் கட்டணமாக பொதியொன்றுக்கு 60 ரூபாவே அறவிடப்பட வேண்டுமென மாநகர சபை வரையறுத்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி, சீமெந்து பொதிகளை ஏற்றுவதற்கான கட்டணத்தை முறையற்ற விதத்தில் விரும்பியவாறு அதிகரித்து, அறவிடுவதாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாக மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் நேற்று (18) தெரிவித்தார்.

இதன்படி 100 பொதிகளுக்கு மேல் ஏற்றப்பட்டால் 50 ரூபா வீதமே கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் கல்முனை மாநகர சபையில் பதிவுசெய்யப்பட்டு, அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதியின்றி இவ்வாறான சேவையில் ஈடுபடுவது சட்டவிரோதமானதாகையினால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஹார்ட்வெயார் உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த கட்டணங்களை உறுதிப்படுத்திய பின்னரே, சீமெந்து பொதிகளை வாகனங்களில் ஏற்றிச்செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் இந்த விடயத்தில் தவறிழைக்கும் ஹார்ட்வெயார் மற்றும் விற்பனை நிலையங்களின் வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஆலையடிவேம்பில் சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை தினமும் கௌரவிப்பு நிகழ்வும்



(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றம் மற்றும் கோளாவில் விநாயகர் அறநெறிப் பாடசாலை ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையும் கௌரவிப்பு நிகழ்வும் கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கோளாவில் ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய குருக்கள் சிவஸ்ரீ சி.கு.கௌரி சங்கர் அருளாசி வழங்கியதுடன், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜ் பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதிகளாக கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயத்தின் மு.சண்டேஸ்வரன், ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய தலைவர் நா.ஏரம்பமூர்த்தி, பிரதேச இந்து கலாசார அலுவலர் சர்மிளா பிரசாத், அம்பாறை மாவட்ட சர்வமத குழுத் தலைவர் ஐ.எல்.ஹாசிம், ஓய்வுநிலை அதிபர் பெ.தணிகாசலம்,



அதிபர் ஸ்ரீ.மணிவண்ணன், கோளாவில் 1, 2 கிராம அலுவலர்களான பொ.முரளிதரன், சுமணாரதி இன்பராசா, ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய முன்னாள் தலைவர்களான ஞா.பாக்கியராசா, க.நாராயணன், த.பூபாலபிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதில் கோளாவில் விநாயகர் அறநெறிப் பாடசாலை கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டதுடன், கலந்துகொண்டவர்களுக்கு பரிசில்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

# ஓட்டமாவடியில் இரத்ததான முகாம்

(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாமொன்று நடைபெறவுள்ளதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் தெரிவித்தார்.

நாட்டின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக ஓட்டமாவடி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இவ் இரத்ததான முகாம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இரு பாலாருக்கும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இரத்ததான முகாமில் அனைவரும் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்குமாறு இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் வேண்டிக்கொண்டுள்ளார்.

# செங்கலடி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் வருடாந்த பாற்குட பவனி



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு, செங்கலடி - ரமேஸ்புரம் சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தின் பாற்குட பவனி நேற்று முன்தினம் (17) வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கொம்மாதுறை சித்திவிநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஆரம்பமான பாற்குட பவனியில் பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சித்திரவேலாயுத சுவாமிக்கு பாலாபிஷேகம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது. பாற்குட பவனியை அலங்கரிக்க பொம்மலாட்டம், புலியாட்டம், குதிரையாட்டம் என்பனவும் இடம்பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.



# சட்டவிரோதமான முறையில் பெற்றோல் கடத்தியோர் கைது

## கற்பிட்டியில் 1,429 லீற்றர் கைப்பற்றல்




(ஜூட் சமந்த)

கற்பிட்டி, தலுவ பகுதியில் ஆயிரத்து 429லீற்றர்



பெற்றோல் கடத்திச்சென்ற லொறியொன்றை முற்றுகையிட்ட பொலிஸார் சந்தேக நபர்கள்

இருவரை கைதுசெய்துள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் (17) இரவு 11.30 மணியளவில் பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது.

சிலாபம், வெல்ல பகுதியைச் சேர்ந்த இருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

குளிரூட்டப்பட்ட லொறியொன்றில் சிலாபத்திலிருந்து கற்பிட்டியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கையிலேயே கடற்படையினர் சோதனை நடத்தியுள்ளனர்.

ஆனமடுவவில் கடந்த 15ஆம் திகதி 13ஆயிரத்து 200லீற்றர் பெற்றோலும் 17ஆம் திகதி புத்தளத்தில் 400லீற்றர் பெற்றோலும் கைப்பற்றப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.



அவுஸ்திரேலியாவுக்கான புதிய உயர்ஸ்தானிகர் போல் வெஸ்லி ஸ்டீபென்ஸ், நேபாளத்துக்கான புதிய தூதுவர் பாஷுதேவ் மிஷ்ரா ஆகியோர் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்றுமுன்தினம் (17) கையளித்தனர்.



# ஐக்கிய நாடுகள் அமைப்பினால் 325மில்லியன் டொலர் உதவி




(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையின் கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பொருளாதாரத் திட்டங்களுக்கு உதவுமுகமாக ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்பு கட்டமைப்பின் கீழ் 2030வரை 325மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை இலங்கைக்கு வழங்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்நிதி கையளிக்கும் ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் நிதியமைச்சின் திறைசேரியில் வைத்து கைச்சாத்திடப்பட்டது. நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சமரசிங்கவுக்கும் ஐக்கிய நாடுகள் இலங்கைப் பிரதிநிதி ஹனா சிங்கர் ஹம்டி இடையிலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந் நிகழ்வில், வெளிநாட்டு விவகார அமைச்சின் செயலாளர் திருமதி அருணி விஜேவர்தன மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் ஆசிய பசுபிக் இணைப்பாளர் டேவிட் மெக்கலனும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிதி 2023 -2027ஆம் ஆண்டுவரை இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனங்களால் அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்கு பயன்படுத்தப்படுமென அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளோரின் நலன் கருதி ஆடைத்துறையினரின் செயற்பாடுகளுக்கு பாராட்டு

மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இலங்கையர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தொழிலாளர்களின் நலனை உறுதிப்படுத்தும் வகையில், இலங்கையில் ஆடைத்துறை மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஆதரவாக Ethical Trading Initiative (ETI)மற்றும் American Apparel அமெரிக்க ஆடை மற்றும் பாதணி சங்கம்-யுயுகுயுஇன் பதிலுக்கு கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF) தனது பாராட்டுகளை தெரிவித்துள்ளது.

நுவுஐஆனது இலங்கையிலுள்ள பொருளாதார நிபுணர்கள், தொழில் சங்கங்கள், பணியாளர் பிரதிநிதிகள் மற்றும் அங்கத்துவ நிறுவனங்களுடன் இணைந்து தொழிலாளர்கள், வழங்குநர்கள் மற்றும் தொழில்துறையினர் மீதான பொருளாதார அழுத்தங்களைப் புரிந்துகொண்டு அவர்களின் நலனுக்காக ஒன்றிணைந்து செயல்படும். முதற்கட்ட நடவடிக்கையாக உலருணவுகள், மருந்துகள், மளிகைப் பொருட்கள் மற்றும் சமைத்த உணவுகள் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக, சரியான நேரத்தில் பணம் செலுத்துவதை உறுதி செய்வதற்கும் சட்டத்திற்கு இணங்குவதற்கும் சப்ளையர்களுடன் இணைந்து பணியாற்ற AAFA உறுதிபூண்டுள்ளது.

JOINT APPAREL ASSOCIATION FORUM
SRI LANKA APPAREL

ஊழியர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனை உறுதி செய்வதற்கு தொழில்துறை முன்னுரிமை அளிக்கிறது. இதுபோன்ற நெருக்கடியான காலங்களில், தொழில்துறையால் ஏற்கனவே எடுக்கப்பட்ட பணியாளர் நலன்புரி நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்படும். மேலும், இந்த கூட்டு நடவடிக்கையை துயுயுகு பாராட்டியுள்ளது. சில தொழிற்சாலைகள் உலருணவுப் பொருட்களை விநியோகிக்க நலத்திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளன, ஏனைய தொழிற்சாலைகள் தங்கள் தொழிலாளர்களுக்கு வீட்டிற்கு கொண்டு செல்ல மேலதிக உணவை வழங்குகின்றன, இதனால் அவர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் உணவளிக்க உதவுகிறார்கள். சிறு மற்றும் நடுத்தர நிறுவன ஊழியர்களின் குழந்தைகளுக்கு இலவச பாடசாலை புத்தகங்கள், மருத்துவ வசதிகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு சிறப்பு உணவுப் பொதிகளும் வழங்கப்படுகின்றன.

"ஆடைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் தங்கள் ஊழியர்களின் தேவைகளுக்கு ஏற்றவகையில், நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம். ஜூன் 2022க்குள், சுமார் 80வீத ஆடை உற்பத்தியாளர்கள் ஆண்டு ஊதிய உயர்வுக்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை அதிகரித்துள்ளனர். இது 25வீத அதிகரிப்பு மற்றும் இந்த அதிகரிப்புகள் 2021இல் இருந்து நடைமுறைக்கு வருகிறது" என JAAF பொதுச்செயலாளர் யொஹான் லோரன்ஸ் கூறினார்.

இலங்கையிலிருந்து ஆடைகளை கொள்வனவு செய்யும் சர்வதேச ஆடை வர்த்தக நாம பிரதிநிதிகளின் இந்த நடவடிக்கை இலங்கைக்கும் வழங்குநர்களுக்கும் இடையில் பல வருடங்களாக கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையான உறவை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

ஊழியர்களின் நலனை உறுதி செய்யும் அதேவேளையில் இதுபோன்ற சவாலான காலங்களில் செயல்பாடுகள் மற்றும் உற்பத்தியைத் தொடர நிறுவனங்களின் வலிமை மற்றும் பின்னடைவை JAAF பாராட்டுகிறது. மேலும் ETI மற்றும் AAFA வழங்கிய ஆதரவைப் பாராட்டி, JAAF தொழில்துறைக்கு ஆதரவளிக்கும் அவர்களின் முயற்சிகளுக்கு முழுமையாக ஆதரவளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய அரசும்...

இன்றைக்கு இலங்கை என்ன நிலைமை? தமிழர்களை அழித்த ஜெயவர்தன மருமகனும் ஒரே நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டவருமான ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் ஜனாதிபதி ஆகியுள்ளார் என்பது வேடிக்கையான விடயம் ஆகும். கறுப்பு ஜூலை என 1983இல் இலங்கைக் கலவரம் நடந்தபோது ரணில் விக்கிரமசிங்க தன் மாமனார் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையில் இடம்பெற்றார். அன்றைக்கு தமிழர்களைத் தாக்குவதை நிறுத்த அவசரகாலநிலையை இலங்கையில் பிரகடனம் செய்யுங்கள் என்று இந்தியா சொல்லும்போது ஜெயவர்த்தனவும் ரணில் விக்கிரமசிங்கவும் உடன்படவில்லை. தேர்தல் காலத்தில் பல உறுதிகள் தமிழர்களுக்குக் கொடுத்து ஆட்சிக்கு வருவார்கள். ஆனால், அந்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதில்லை. இது தொடர்ந்து சேனநாயக்க, கொத்தலாவல, பண்டாரநாயக்காக்கள் என இன்றைக்கு வரை சந்திரிகா, ராஜபக்ஷக்கள், ரணில் விக்கிரமசிங்க என பலரும் தமிழர்களுக்கு கொடுத்த உறுதிமொழிகளை குப்பைத் தொட்டியில்தான் போட்டார்கள்.

1. இன்றைய இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அமைதியான அரசியல் தீர்வைக் காணும் நோக்கத்தில் இந்திய அரசு அவசரமாகவும் அவசியமாகவும் தலையிட்டு, சுதந்திரத்திற்கான பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு முயல வேண்டும். 1948ஆம் ஆண்டுக்கு முன்னர் தீவின் வடக்கு-கிழக்கு தமிழர் பாரம்பரிய தாயகத்தில் வாழ்ந்த மக்கள் மற்றும் அவர்களின் சந்ததியினர் மற்றும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் சுதந்திரமான சுதந்திர இறையாண்மை கொண்ட தனி நாடு ஈழத்தை விரும்பினால் அதை பரிசீலிக்க வேண்டும்.

2. கடந்த 1987ஆம் ஆண்டு தமிழ்த் தலைவர்களுக்கு இந்தியாவும், 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படியும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

3. இலங்கையில் 1950இலிருந்து போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இலங்கையால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைகள், இன அழிப்பு உட்பட அனைத்து குற்றங்களையும் புலன் விசாரணை செய்து விசாரிக்க சர்வதேச சுதந்திரமான, நம்பகமான விசாரணை அயலக பொறிமுறையில் நடத்த இந்திய அரசு தனது ஆதரவை தெரிவிக்க வேண்டும். உக்ரைன் போரில் இன அழிப்பு என்ற நிலையில், சர்வதேச சுதந்திரமான, நம்பகமான விசாரணை வேண்டும் என்று இந்தியா கடந்த மார்ச் 2022 ஐ.நா. மனித உரிமை ஆணைய 49ஆவது அமர்வில் வலியுறுத்தியுள்ளது. அதுபோலத்தான் இந்தியா இதை ஆதரிக்க வேண்டும் என்று தொடர்ந்து 2012இலிருந்து குரல் கொடுத்து வருகின்றோம். ஏற்கனவே தமிழக சட்டமன்ற தீர்மானம், டெசோ தீர்மானங்களும் இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு நம்பகமான சுதந்திரமான சர்வதேச விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

4. சர்வதேச கண்காணிப்பு நிதியம், உலக வங்கி, பாரிஸ் கிளப், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச சமூகத்திடம் இருந்து இலங்கை பொருளாதார உதவியை நாடும் நிலையில், இலங்கைக்கு உதவி செய்யும்போது தமிழர்களின் நலன் குறித்தும் விவாதிக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகம் இலங்கையின் ஏமாற்று வடிவங்களையும், ஐ.நா மற்றும் UNHRC உட்பட சர்வதேச சமூகத்திற்கான அதன் சிறந்த அர்ப்பணிப்புகளையும் உணர்ந்து கொள்ள வேண்டும். எந்தவொரு உதவியும் பின்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

5. இலங்கையில் வடக்கு, கிழக்கு மாநிலங்களிலிருந்து இலங்கை இராணுவத்தை திரும்பப் பெறுதல். இவ்வளவு பொருளாதாரச் சிக்கல் இருந்தும் சிங்கள அரசு ஏன் தனது இராணுவத்தை தேவையில்லாமல் அதிகமாக செலவு செய்து தமிழர் வாழும் பகுதிகளில் பீதியைக் கிளப்பும் அளவில் பெரிய பெரிய இராணுவ முகாம்களை தொடர்ந்து அனுமதிக்க வேண்டும்.

6.முள்ளிவாய்க்காலின்போது காணாமல் போனவர்களைக் கண்டறிந்து அவர்களின் உறவினர்களிடம் இலங்கை அரசு ஒப்படைக்க வேண்டும்.

7.இறுதிப் போர் 2009இன்போது கைது செய்யப்பட்ட தமிழர்களை இலங்கை அரசு விடுவிக்க வேண்டும்.

8. தமிழர் பகுதியில் சிங்களவர்களைக் குடியமர்த்துதல், தமிழர்களின் விவசாய நிலங்களை அரசு உத்தரவால் ஆக்கிரமிப்பு செய்தல், சிங்கள மக்களுக்கு விவசாய நிலங்களை அத்துமீறி அழித்தல், இந்துக் கோவில்களை புத்த விகாரைகளாக மாற்றுதல் நிறுத்த வேண்டும்.

9.அமைதிப்படை இலங்கையில் இருந்தபோதும், முள்ளிவாய்க்கால் போரின்போதும் கணவன்/தந்தையை இழந்த விதவை/வாரிசுகளுக்கு மறுவாழ்வை உறுதி செய்ய வேண்டும்.

10. இந்தியா தமிழர்களுக்கு அளித்த மறுவாழ்வு நிதியை தமிழர்களுக்கே செலவு செய்யப்பட்டதா என்பதை இந்திய அரசு இலங்கை அரசிடம் விசாரிக்கவும் வேண்டும்.

11. புவி அரசியலில் வெளிநாட்டு பண உதவிக்காக இலங்கை இந்து மகா கடலிலும் இலங்கையிலும் சீனா போன்ற இந்தியாவுக்கு எதிரான நாடுகளை இலங்கை ஆதரிப்பதை இந்திய அரசு கண்காணிக்க வேண்டும்.

இலங்கையில் ஜனநாயக ரீதியாக தேர்தல் நடத்த வேண்டும் என்றால் ஏறத்தாழ 8 பில்லியன் டொலர் தேவை. அதற்கான சூழலும் இல்லை. எனவே அனைத்துக் கட்சி இணைந்த ஒரு தேசிய அரசை அமைத்து நிலையான ஆட்சி இலங்கையில் நடக்கிறது என்று சர்வதேசத்திற்கும் ஐ.எம்.எஃப் போன்ற சர்வதேச பண அமைப்புகளுக்கும் இலங்கையில் பிரச்சினை இல்லாமல் இருக்கின்றது என்ற பாவலாக காட்ட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க விரும்புகின்றார்.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் பாரிசில் உலக பண நிறுவனங்களான சர்வதேச கண்காணிப்பு நிதியம், உலக வங்கி, பாரிஸ் கிளப், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பன்னாட்டு பணப் பரிவர்த்தனை மாநாட்டில் மூன்றாம் உலக நாடுகள் கலந்துகொள்ளும் வரை தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து தருவோம் என்று சொன்னால் தான் பன்னாட்டு நிதி உதவி கிடைக்கும் என்பதற்காக சிங்கள ஆட்சியாளர்கள் கரிசணமாக தமிழர்களின் நலனை ஒப்புக்கு பேசுவார்கள். இப்படி நடந்தது தான் சந்திரிகாவின் சமஸ்டி வரைவுத் திட்டம். அதன்பின் பிரேமதாசவின் உறுதிமொழி, ராஜபக்ஷவின் புதிய அரசியல் நிர்ணய சபை, சகல அதிகாரங்கள் கொண்ட மாகாண கவுன்சில் என்ற உறுதிமொழி, இன்றைக்கு மொட்டு சின்னத்தில் ஒரே உறுப்பினராக வெற்றிபெற்று ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்கவின் உறுதிமொழியும் தண்ணீரில் எழுதியது தான்.

இன்றைக்கு இலங்கை ஹம்பாந்தோட்டையில் சீனாவின் யுவான் வாங்-5 உளவுக் கப்பல், பாகிஸ்தான் பி.என்.எஸ். 5 போர்க் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் ஓகஸ்ட் 12 வரை நிற்க அனுமதி என்ற நிலையில் இந்தியாவுக்கு விரோதமாகவும், இந்துமகா கடலில் அமைதியை நாசப்படுத்துகின்ற வகையில் கையாலாகாத இலங்கையாக இருக்கின்றது. ஏற்கனவே, டிகோகர்சியாவில் அமெரிக்கா, பிரிட்டன் மையம் கொண்டுள்ளன. இந்து மகாக் கடலில் ஜப்பான் எண்ணெய் ஆய்வுகள் நடத்துகின்றன. பிரான்ஸ் இந்த பிராந்தியத்தில் தலைகாட்டுகிறது. சீனா இலங்கையின் கொழும்பு துறைமுகம் என எட்டுத்திக்கும் சுற்றி தமிழகத்தின் அருகில் உள்ள கச்சத்தீவின் அருகில் வரை வந்துவிட்டது.

இவ்வாறான நிலையில், இலங்கை பொருளாதாரச் சிக்கல் இருந்தபோது மற்ற நாடுகளை விட இந்தியா துடிதுடித்து உதவியதை மறக்க முடியாது. இன்றைக்கு இந்தியாவுடன் பாகிஸ்தான், சீனா, மியான்மர் உறவுகள் சீராக இல்லை. நேபாளமும் சீனா பக்கம் சாய்ந்து விட்டது. வங்கதேசமும் பட்டும் படாமல் உள்ளது. இலங்கையை சீனா மிரட்டிக் கொண்டிருக்கிறது. மாலைதீவு நம்மிடம் உதவிகள் வாங்குவதற்காக சீனாவுக்கும் நமக்கும் மதில்மேல் பூனையாக உள்ளது. எனவே தென்கிழக்கு ஆசிய புவியரசில், இந்து மகா சமுத்திர கேந்திரப் பகுதி, இந்தியாவின் பாதுகாப்பு என்பதையெல்லாம் மனதில் கொண்டு இலங்கைப் பிரச்சினையில் இந்திராகாந்தியைப் போல ஈழத்தமிழர் ஆதரவு நிலை எடுத்தால்தான் நமக்கும் நல்லது, அங்குள்ள தமிழர்களுக்கும் நல்லது என்பதை டெல்லி சௌத் ப்ளோக் உணர வேண்டும். இது அவசியமானது, அவசரமானது.





# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் 27ஆம் திகதி ஆரம்பம்

(யாழ். நிருபர்)

வரலாற்றுப் புகழ்பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

செப்டெம்பர் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு பூங்காவனமும், 6ஆம் திகதி கைலாச வாகனமும், 8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 9ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் 11ஆம் திகதி பூக்காரர் பூசையும் நடைபெறவுள்ளன.

செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ ஏற்பாட்டுக் கூட்டம், பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் இடம்பெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் எட்டப்பட்டன.

அவையாவன,

1.மஹோற்சவ காலத்தில் ஆலயச்சூழலில் ஒருவழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன், போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதை தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரை பக்கத்தில் இருக்கின்ற பாதையின் ஊடாக முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார்சைக்கிள்கள் வாகனத் தரிப்பிடத்திற்கு செல்ல முடியும்.

2. இவ்வருடம் நீர்ப்பாசனத் திணைக்கள பாலத்துடனான நடைபாதை போக்குவரத்து இறுதி ஐந்து நாட்களும் இடம்பெறும்.

3. ஆலய பூசைகளின்போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. போக்குவரத்துப் பாதைகள் பிரயாணிகள் மாற்றுவழி தடைப்படுத்தப்படும்போது பாதையை பாவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

5. ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கு மற்றும் தற்காலிக கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

6. தனியார் காணிகள், கடைகள் ஆலய வீதியில் பக்தி தொடர்பான விடயங்களுக்கே அனுமதிக்கப்படும் என்பதுடன், புதிய கடைகள் மற்றும் வீதியோர கடைகள் வீதியில் அமைக்கப்படுவதற்கு தடைசெய்யப்படும்.

7. ஆலய மஹோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியிருப்பின், அவ் உரிமையாளர் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடத்திய அனுபவம் இருத்தல் வேண்டும்.

8. உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

9.உணவு நிலையங்களுக்கான குடிநீர் பொது சுகாதாரப் பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்திலிருந்து பெறப்பட வேண்டும்.

10. கடை உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

11. பொருட்களின் விலைநிர்ணயம் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

12. அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

13. பக்தர்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு பருத்தித்துறை வடமராட்சி வடக்குபிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக்கொண்டார்.

## கடன் பொறிக்குள் விழுந்திருக்கக்கூடிய இலங்கை

# தன்னை பாதுகாத்துக்கொள்வதற்கு தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை எட்டவேண்டும்

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 13 வருடங்கள் தாண்டியும் போர்க்காலத்தில் இருந்த பொருளாதார நிலையை விட இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாகி உள்ளது. இந்தக் கடன் பொறிக்குள் விழுந்திருக்கக்கூடிய இலங்கை தன்னை பாதுகாத்துக்கொள்வதற்கு ஒரு வழி இருக்கின்றது. அதற்கு தமிழ் மக்களுடன் தமிழ் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை எட்ட வேண்டும் – என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசுக்கு இன்று இருக்கக்கூடிய வருமானத்தை விட புலம்பெயர் தமிழ் மக்களின் வருமானம் அதிகமாக இருக்கக்கூடிய நிலையில், உலகில் மிகப் பலமான நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அந்த அரசுகளுக்கு சுமையாக இல்லாமல் மிகச் சிறந்த ஒரு சமூகமாக இருக்கின்றனர். அந்த மக்களின் உதவிகளை முதலீடுகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

கடன் இல்லாமல் நாடு இருக்கக் கூடிய சந்தர்ப்பம் இருக்கவும் தமிழ் மக்களின் உரிமையை கொடுக்கக்கூடாது என்கின்ற இனவாத போக்கை கடைப்பிடிக்கின்ற சித்தாந்தமே இருக்கின்றது. சர்வதேசரீதியில் இருக்கக்கூடிய கடன் சுமைகளை மேற்கத்திய மற்றும் இந்திய நாடுகளுடன் இணைந்து ஏதோ ஒரு வகையில் பொருளாதாரத்தை நிலைக்கு கொண்டுவரலாம் என கனவு காண்கின்ற நிலையில்தான் இலங்கை இருக்கின்றது.

இதுவரை காலமும் தமிழரை அழிக்க சீனாவின் காலில் விழுந்த நிலையை விட்டு தற்போது மேற்கத்தேய மற்றும் இந்தியாவின் காலில் விழுகின்ற போக்கை சீனா பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை என்று நிலையில், சீனா தான் கொடுத்த கடனிலிருந்து இலங்கையை தப்பவிடாது.

சீனாவின் கப்பல் வருவதற்கு முதல் நாள் உளவு பார்ப்பதற்கென இந்தியா தன்னுடைய விமானத்தை இலங்கைக்கு வழங்கி இலங்கைத் தீவிலுள்ள பூகோளப் போட்டியை இன்னும் தீவிரமடைகின்ற நிலைமை உருவாக்கி இருக்கிறதே தவிர, இந்த நடவடிக்கைகள் எதுவுமே தமிழ் மக்களுக்கு நன்மையை கொடுக்கக்கூடிய விடயம் அல்ல. மாறாக இருக்கக் கூடிய மக்களுக்கும் கடும் பாதிப்புகளையும் சவால்களையும் கொடுக்கின்ற நிலைமை தான் உருவாகும்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கக் கூடாது. தமிழ் தேசம் இலங்கைத்தீவில் இருப்பதை அங்கீகரிக்கக் கூடாது என்ற காரணத்தினால் இன அழிப்புக்குரிய போரை நடத்தி, தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய விடுதலை அமைப்பை அழிப்பதற்கு தமிழ் மக்களையும் சேர்த்து அழிக்கின்ற வேலைத்திட்டத்திற்கு இலங்கை அரசுக்கு உதவி தேவைப்பட்டது. அதில் முதலாவது ஆயுத தேவைக்கான நிதி, இரண்டாவது அரசியல் ரீதியான பாதுகாப்பு. அதாவது, சர்வதேச மட்டத்திலிருந்து வரக்கூடிய அழுத்தத்திலிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்வதற்கான உதவியும் தேவைப்பட்டது.

சீனாவால் கிடைக்கின்ற உதவிகளைப் பெற்று இனவழிப்பு நடவடிக்கையை செய்வதற்கெடுத்த முடிவின் விளைவே இன்று சீனாவின் கப்பல் வருகையாகும்.

சீனாவினது செயற்பாடு இலங்கையை கடன்பொறிக்குள் தள்ளி விட்டுள்ளது. தனது பெயரை இலங்கைத் தீவில் தவிர்க்க முடியாதபடி கண்ணை மூடிக்கொண்டு கடன்களை வழங்கி, இலங்கை உண்மையில் கடனை கட்டலாமா என்பதை ஆய்வு செய்யாமலேயே அதற்கு மாறாக கடன்களை வழங்கினார்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 13 வருடங்கள் தாண்டியும் போர்க்காலத்தில் இருந்த பொருளாதார நிலையை விட இலங்கையின் பொருளாதார நிலை மிக மோசமாகி உள்ளது. இந்தக் கடன் பொறிக்குள் விழுந்திருக்கக்கூடிய இலங்கை, தன்னை பாதுகாத்துக்கொள்வதற்கு ஒரு வழி இருக்கின்றது. தமிழ் மக்களுடன்தமிழ் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை எட்டவேண்டும் – என்றார்.

# சௌபாக்கியா உற்பத்திக் கிராமம் வரணியில் திறந்துவைப்பு



(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி வடக்கு கிராமத்தில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பனைசார் உற்பத்திக் கிராமம் நேற்று முன்தினம் (17) பிற்பகல் திறந்துவைக்கப்பட்டது.

தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைவர் க.இராசதுரை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்துகொண்டு உற்பத்திக் கிராமத்தினை திறந்துவைத்திருந்தார்.

மேலும் நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உஷா, யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

வரணி வடக்கு பனைசார் உற்பத்திக் கிராமம் 13மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீபாத கல்லூரிக்கான அனுமதியில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்

### இ.தொ.காவின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ்



(தலவாக்கலை நிருபர்)

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் தற்போதைய அனுமதி முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கல்வி அமைச்சரை கோரியுள்ளது. இதில் மேலதிகமாக உள்வாங்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் கல்வியியலாளர்களின் கருத்துகளும் உள்வாங்கப்படும் என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி மாணவர் அனுமதி தொடர்பாக இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் தலைமையில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை சந்தித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் சப்ரகமுவ மாகாண பெருந்தோட்டத்துறை பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறைக்கேற்ப இட ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளை ஆசிரியர்களாக உருவாக்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்தனர். அதனால் கல்லூரிக்கு உள்வாங்கப்பட்ட தமிழ் மொழி மூலமான 100சதவீத மாணவர்களும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளாகவே இருந்தனர். ஆனால் தற்போது பெருந்தோட்டத்துறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களாக வேலை செய்பவர்களின் தொகை ஒரு இலட்சத்து 50ஆயிரமாக குறைந்துள்ளது. மேலும் இத்தொகை குறைந்து கொண்டே செல்கின்றது. பெரும்பாலான தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு தொழில் துறைகளில் ஈடுபடுகின்றனர். இதனால் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிக்கும் 30 வருட பழமை வாய்ந்த நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. கல்லூரிக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் பெற்றோர் தோட்டத்தில் வேலை செய்பவர்களாகவும், அவர்கள் ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்பவர்களாக இருக்க வேண்டும் என்ற நியதி மாற்றப்பட்டு அதற்கு பதிலாக ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி அனுமதியை கோரும் மாணவரின் ஒரு தலைமுறைக்கு முற்பட்டவர்கள் தோட்டத்தில் வேலை செய்பவர்களாக இருந்தால் அந்த மாணவர் அனுமதிக்கு தகுதியானவர் எனக் கருதப்பட வேண்டும். அத்துடன், தோட்டப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றிருந்தால் அதுவும் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி அனுமதிக்கான மேலதிக தகுதியாக கொள்ளப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

எனினும், இதற்கு மேலதிகமான திருத்தங்கள் மேற்கொள்ள மலையக கல்வியாளர்களின் கருத்துகளையும் உள்வாங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. விரைவில் இது தொடர்பாக சந்திப்புகளையும் நடத்த தீர்மானித்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவதில் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்

### இராதா எம்.பி. வலியுறுத்து



(க.கிஷாந்தன்)

ஆளுநர்கள் நியமனத்தைவிடவும் மாகாணத்தில் மக்கள் ஆட்சியை நிறுவுவதற்கான நகர்வுகள் சம்பந்தமாக அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ. இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று(18) நடைபெற்ற ஊடக சந்திப்பில், சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஆளுநர் நியமனம் சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போதைய நிலையில், ஆளுநர் நியமனங்களைவிட, மாகாணத்தில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக மாகாணங்களுக்கான அதிகாரம் என்பது ஆளுநர் ஊடாக அல்லாமல், மக்கள் ஊடாக தெரிவுசெய்யப்படும் முதல்வர் ஊடாகவே கையாளப்பட வேண்டும். அதிகாரங்களை முழுமையாக பகிரும் வகையில் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுலாக வேண்டும்.

13ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தாமல் இழுத்தடிக்கும் இலங்கை, தற்போது சீனக் கப்பலையும் நாட்டுக்குள் அனுமதித்துள்ளது. எது எப்படி இருந்தாலும் இந்தியாவை அனுசரித்து செல்லும் அணுகுமுறையையே இலங்கை பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மேலும், சர்வகட்சி அரசு தொடர்பிலான பேச்சுகள் இன்னமும் வெற்றியளிக்கவில்லை. சர்வகட்சி அரசில் அமைச்சர் பதவிகளை ஏற்கக்கூடாது என்பதே மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு, இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரமும் இது தொடர்பில் ஆராயப்பட்டு, உறுதியான முடிவு அறிவிக்கப்படும் என்றார்.

# தோட்டப்புறங்களில் ஒன்லைன் முறையூடாக வைத்தியசேவைகள்

தோட்டப்புற மக்களுக்காக ஒன்லைன் முறையின் கீழ் வைத்திய சேவைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கும் முறை ஆரம்பிக்கப்படவுள்ளது.


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள புதிய கிராமப்புற அபிவிருத்தி அதிகாரசபையினால் செப்டெம்பர் மாதம் 01ஆம் திகதி பதுளை, இதல்கஸ்ஹின்னவத்த கிராமத்தினை மையமாகக்கொண்டு இந்த சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் கடந்த 16ஆம் திகதி தோட்டப்புற வீடமைப்பு பிரிவின் உயர் அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தோட்டப்புற வீடமைப்பு பிரிவின் கீழ் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த அமைப்பு, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்புச்சபை, புதிய கிராமப்புற அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் அதற்காக செயற்படவுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஆலோசனையின்பேரில் செயற்படும் இந்த ஒன்லைன் வைத்திய சேவை செயற்றிட்டம் O - Doc என பெயரிடப்பட்டுள்ளது. அதற்காக ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் ரூ.100 செலவிடப்படுவதால் முழு குடும்பத்திற்கும் அதன் மூலம் சேவையை பெற்றுக்கொள்ளலாம். இதன் அடிப்படையில், 24 மணி நேர சேவையில் 150இற்கும் மேற்பட்ட வைத்தியர் குழுவின் ஊடாக இந்த சேவையை பெறலாம். எதிர்வரும் காலங்களில் இந்த வைத்தியசேவை நாட்டின் அனைத்து தோட்டப்புற பகுதிகளுக்கும் அமைக்கப்பட வேண்டுமென அமைச்சர் உயர்அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

# முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



(மஸ்கெலியா நிருபர்)

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள தோட்டப் பகுதிகளில் வறியநிலையில் வாழும் குடும்பங்களின் முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு போற்றி தோட்ட ஆலயத்தில் நேற்றுமுன்தினம்(17) இடம்பெற்றது.

சிசிடி சிலோன் (CCD-Ceylon) எனும் அமைப்பின் ஊடாக போற்றி, நிவ்ட்டன், நிவ்வெளி, ஹோர்லி, எல்படை மற்றும் ஐரபி ஆகிய தோட்டங்களில் வசிக்கும் முன்பள்ளி சிறார்களுக்கே 3ஆயிரத்து 500ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், அம்பகமுவ பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர், சிசிடி சிலோன் அமைப்பின் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் ப.ஜெக்ஸன் மற்றும் போற்றி தோட்ட முகாமையாளர், நோர்வூட் பிரதேச பொலிஸ் அதிகாரி, தோட்டத் தலைவர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# அக்கரைப்பற்றில் அனுமதியின்றி ஆற்றுமண் ஏற்றிய வாகன உரிமையாளருக்கு ரூ. பத்தாயிரம் தண்டப்பணம்

(கோணாவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியில் அனுமதிப் பத்திர நிபந்தனையை மீறி ஆற்றுமண் ஏற்றிவந்த ரிப்பர் வாகன உரிமையாளர்களுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (17) கோளாவில், பாலமுனை ஆகிய வெவ்வேறு பிரதேசங்களிலிருந்து அனுமதிப் பத்திர நிபந்தனையை மீறி ஆற்று மண் ஏற்றிவந்த வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

கைப்பற்றப்பட்டிருந்த ரிப்பர் வாகனங்களுடன் அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது இரு வாகனங்களுக்கும் தலா 10,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

வாகன உரிமையாளரினால் குறித்த தண்டப்பணம் செலுத்தப்பட்டதோடு, வாகனங்களும் விடுவிக்கப்பட்டன.

# புல்மோட்டை ஆண்டாங்குள விவசாயிகளுக்கு இடைப்போக நெற்செய்கைக்கு பசளை விநியோகம்

(கந்தளாய் நிருபர்)

புல்மோட்டை ஆண்டாங்குள (இடைப்போக) விவசாயிகள் தங்களுக்குத் தேவையான பசளை புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நிலையில், மேற்படி விவசாயிகளுக்கு வழங்காது அது பிறிதொரு ஊருக்கு ஏற்றப்படவுள்ளதாக அறிந்துகொண்ட குறித்த விவசாயிகள் உடனடியாக விடயத்தை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக்கின் கவனத்திற்கு கொண்டுசென்றனர்

இதுவிடயமாக விரைந்து செயற்பட்டு நடவடிக்கை எடுத்த குச்சவெளி தவிசாளர் நேற்று (18) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் வழிகாட்டலில் செயற்பட்டு கமநல திணைக்கள ஆணையாளரை தொடர்புகொண்ட குச்சவெளி தவிசாளர் ஆண்டங்குள விவசாயிகளின் நிலைமையை தெளிவுபடுத்தி பசளையை அவர்களுக்கு வழங்கவேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்தி பசளையினை விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுத்தார்.

திருகோணமலை மாவட்ட கமநல உதவி ஆணையாளர் திருமதி வருணியின் ஒத்துழைப்பால் ஆண்டாங்குள விவசாயிகளுக்கு உரிய பசளை, புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் வைத்து நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ரனூஸ் தலைமையில் வழங்கப்பட்டதாக குச்சவெளி தவிசாளர் தெரிவித்தார்.

குறித்த நேரத்தில் விவசாயிகளுக்கான பசளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்த குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளருக்கு விவசாயிகள் தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பில் பொலிஸாருக்கு நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பம்



(மட்டக்களப்பு நிருபர்)

நாடளாவிய ரீதியில் மீண்டும் கொரோனா தொற்று பரவிவரும் நிலையில், சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பல்வேறு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


அதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பிராந்திய சுகாதாரப் பணிமனை ஊடாக பல்வேறு கொரோனா தடுப்பு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அதன் முதற்கட்டமாக அரச அலுவலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு முதற்கட்டமாக நான்காம் கட்ட பூஸ்டர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் கடமைபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நான்காம் கட்ட பூஸ்டர் பைசர் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

குறித்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை மட்டக்களப்பு மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இளையதம்பி உதயகுமார் தலைமையிலான சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



***புலம்பெயர் அமைப்புக்கு கந்தோர் திறக்கிற ஒருபுறம் மறுகா புலம்பெயர் அமைப்புகள் எல்ல மீறி செயல்பட்டால் மீண்டும் தடைபோடுவாங்களாம் எண்டு மொட்டுக்கட்சி ஆக்கள் எச்சரிக்கிற மறுபுறம்!***

***இதப்பார்தா ரோசம் கெட்ட வாலாட்டிற சில தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புக்கள்தான் வருமே தவிர மானம் ரோசம் உள்ள ஒருவரும் ஸ்ரீலங்காவ திரும்பியும் பாக்கமாட்டினாங்க எலுவா?***

# வாழைச்சேனையில் இறைச்சி விற்பனைக்காக மலசலகூடத்தில் மாடு அறுத்த கடை முதலாளி

## சம்பவத்தில் கைதான இருவருக்கு பிணை



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள செம்மண்ணோடை பிரதேசத்தில் விற்பனைக்காக வீடொன்றின் மலசலகூடத்தில் திருட்டு மாடு ஒன்றை அறுத்துக்கொண்டிருந்த மாட்டு இறைச்சிக்கடை உரிமையாளர் ஒருவர் உட்பட கைதுசெய்யப்பட்ட இருவரையும் திங்கட்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் 50 ஆயிரம் ரூபா சீரப்பிணையில் விடுவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) குறித்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு இறைச்சி விற்பனைக்காக திருட்டு மாடு ஒன்றை மலசலகூடத்தில் வைத்து அறுத்து இறைச்சியாக்கிக்கொண்டிருந்தபோது பொலிஸாரை கண்டு ஒருவர் தப்பியோடிய நிலையில், கடை உரிமையாளர் உட்பட இருவரை கைதுசெய்ததுடன், அங்கிருந்து அறுக்கப்பட்ட ஒருதொகை இறைச்சி மற்றும் முச்சக்கரவண்டி ஒன்றையும் மீட்டனர்.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்டவர்களை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது இருவரையும் நீதவான் 50 ஆயிரம் ரூபா சீரப் பிணையில் விடுவித்தார்.

இதேவேளை அங்கிருந்து தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பு திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்

(மட்டக்களப்பு நிருபர்)



ஈழமணித் திருநாட்டின் கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புடையதும் தொன்மை வாய்ந்ததுமான மகா துறவி சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதியால் ஸ்தாபிக்கப்பட்ட மட்டக்களப்பு கல்லடி ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா நேற்று முன்தினம் (17) நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.



கொடியேற்றத்தைத் தொடர்ந்து முதல் எட்டு நாட்களும் திருவிழாக்கள் நடைபெற்று, ஒன்பதாம் நாளாகிய 25.08.2022 வியாழக்கிழமையன்று பி.ப. 3 மணியளவில் தேர்த்திருவிழாவும் பத்தாம் நாளாகிய 26.08.2022 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வங்கக்கடலில் சமுத்திர தீர்த்தோற்சவமும் இடம்பெற்று இவ்வாண்டிற்கான மஹோற்சவ பெருவிழா இனிதே நிறைவடையவுள்ளது.



இலங்கைத் திருநாட்டில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் தமிழ் மொழியில் வேத பாராயணங்கள் ஓதப்பட்டு, முருகப்பெருமானுக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறும் ஒரேயொரு ஆலயமாக இவ்வாலயம் திகழ்வதும் குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கோணவத்தை நிருபர்)

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரைப்பற்று, மொராவோடை கடற்கரை பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி உபபொலிஸ் பரிசோதகர் நூர்தீன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று சந்தேகநபரை கைதுசெய்துள்ளதுடன், அவரிடமிருந்து 1500 மில்லிகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (17) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்

# அக்கரைப்பற்றில் மரக்கறிப் பயிர்ச்செய்கை அறுவடை விழா



(அக்கரைப்பற்று நிருபர்)

சமுர்த்தி திணைக்களத்தினால் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் சமுர்த்தி பயனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வித்துகள் வழங்கப்பட்டு நடுகை மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு நடுகை பண்ணப்பட்ட மரக்கறிப் பயிர்ச்செய்கை அறுவடை நிகழ்வு அக்கரைப்பற்று 06 இசங்கணிச்சீமை கிராமத்தில் இடம்பெற்றது.

இதன்போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.றஸ்பி, சமுர்த்தி கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# குச்சவெளி இளைஞர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்





(கந்தளாய் நிருபர்)

குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட சலப்பையாறு பகுதியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் படையணி (யூத்கோப்ஸ்) நிறுவனத்தின் மூலம் குச்சவெளி பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளின் ஆங்கில அறிவை மேம்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல், குச்சவெளி இளைஞர் படையணியின் பொறுப்பதிகாரிக்கும், குச்சவெளி பிரதேச தவிசாளருக்குமிடையில் நேற்று முன்தினம் (17) குச்சவெளி பிரதேச சபையின் தலைமையகத்தில் தவிசாளர் ஏ.முபாறக்கின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது குச்சவெளி தவிசாளரினால் பிரதேச சபைக்குட்பட்ட இளைஞர், யுவதிகளின் நலன்கருதி அவர்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் ஆங்கில அறிவை வளர்க்கும் முகமாக ஆங்கிலம், கணினி கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதை ஏற்றுக்கொண்ட குறித்த அதிகாரி இதற்கான ஏற்பாடாக மிக விரைவில் நேர்முகத் தேர்வை நடத்தி கணினி மற்றும் ஆங்கில பயிற்சிக்காக இளைஞர், யுவதிகளை தெரிவுசெய்வதாகவும் தவிசாளரிடம் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் படையணியின் செயற்பாடுகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் இதன்போது தெரிவித்தார்.

# வரட்சியினால் பாதிக்கப்பட்ட மஜ்மா நகர் மக்களுக்கு பிரதேச சபையால் குடிநீர் விநியோகம்

(மட்டக்களப்பு நிருபர்)





கிராம அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய பிரதேச செயலாளரினால் மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க பிரதேச சபையின் ஏற்பாட்டில் மஜ்மா நகரில் வரட்சியினால் பாதிக்கப்பட்டு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

இதில் அப்துர் ரஹ்மான் வீட்டுத்திட்டம், முஹைதீன் அப்துல் காதர் வீட்டுத்திட்டம், சிராஜியா அரபுக்கல்லூரி, பிலால் பள்ளிவாசல் மற்றும் றஹ்மா ஜும்ஆ பள்ளிவாசல் போன்றவற்றிற்கு ஆரம்பகட்டமாக நீர்த்தாங்கி வைத்து குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

குடிநீர் வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலக அனர்த்த சேவைகள் உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம், பிரதேச சபை சாரதி முஹம்மது ஜபீர் ஆகியோரும் பிரதேச பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டை செய்த தவிசாளர் ஏ.எல்.நௌபர், ஓட்டமாவடி பிரதேச செயலார் வீ.தவராஜா, ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.சிஹாப்தீன், உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்ஹர், பிரதேச சபை உறுப்பினர், பிரதேச செயலக மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அப்பகுதி மக்கள் சார்பாக கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் ஏ.எல்.சமீம் நன்றி தெரிவிக்கின்றார்.

# 92 நாடுகளில் 35,000 பேருக்கு

## குரங்கு அம்மை தொற்று




உலகம் முழுவதும் 92 நாடுகளில் 35 ஆயிரம் பேருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில், கடந்த இரு வாரங்களில் நோய்த் தொற்று 20 சதவீதம் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பேசிய அந்த அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம்,

“நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்துவரும் நிலையில், நோய் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தடுப்பூசிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும் பல நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்த தடுப்பூசியின் தேவை அதிகமுள்ளது'' - எனத் தெரிவித்தார்.

# சிம்பாப்வேயில் பரவும் தட்டம்மை

## 157 சிறுவர்கள் உயிரிழப்பு



சிம்பாப்வேயில் தட்டம்மையால் 157 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

சிம்பாப்வேயில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து நாடு முழுவதும் சிறுவர்களிடையே தட்டம்மை நோய் பரவி வருகிறது. இதுவரை 2,056 சிறுவர்கள் நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களில் 157 சிறுவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

உயிரிழந்த சிறுவர்கள் அனைவருக்கும் தட்டம்மைக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கவில்லை. மத நம்பிக்கைகள் காரணமாக பலர் தங்களது குழந்தைகளுக்கு தட்டம்மை உள்ளிட்ட நோய்களுக்கு தடுப்பூசி செலுத்த மறுத்து வருகின்றனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, 6 மாதம் முதல் 15 வயதுக்குட்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தும் மிகப்பெரிய திட்டத்தை மதத் தலைவர்களின் உதவியுடன் சிம்பாப்வே அரசு செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

# ‘தமிழ்க்கடல்' - தமிழறிஞர் நெல்லை கண்ணன் காலமானார்



பிரபல இலக்கியப் பேச்சாளர் 'தமிழ்க்கடல்' நெல்லை கண்ணன் உடல்நலக்குறைவு காரணமாக நேற்று திருநெல்வேலியிலுள்ள தனது இல்லத்தில் காலமானார்.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த நெல்லை கண்ணன் (வயது 77), காங்கிரஸ் கட்சியில் பேச்சாளராக திகழ்ந்தார். தமிழறிஞர், இலக்கியப் பேச்சாளர், ஆன்மிக சொற்பொழிவாளர், அரசியல்வாதி என பன்முகம் கொண்டவர். இவருக்கு கடந்த சில நாட்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், திருநெல்வேலி டவுன் அம்மன் சன்னதி தெருவிலுள்ள இல்லத்தில் தங்கியிருந்த அவர், நேற்று (ஓகஸ்ட் 18) உடல்நலக்குறைவு மற்றும் வயது முதிர்வின் காரணமாக காலமானார். அவருக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உட்பட அரசியல் தலைவர்கள், இலக்கியவாதிகள் என பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ந.சு.சுப்பையாபிள்ளை - இலக்குமி அம்மையார் ஆகியோரின் 4ஆவது மகனாக கடந்த 1946ஆம் ஆண்டு விவசாய குடும்பத்தில் பிறந்தவர் நெல்லை கண்ணன். தகப்பனார் குடும்பம் நெல்லையை பூர்விகமாகக்கொண்டது.

விவசாய குடும்பத்தில் பிறந்த இவர், தமிழ் மீது தனியாத ஆர்வம் கொண்டவர். பாரதி பாடல்கள், தமிழ் இலக்கிய நூல்கள் என அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர். பேச்சாற்றல் மிக்கவர் என்பதால் ஏராளமான பட்டிமன்றங்களில் கலந்துகொண்டவர். அரச தொலைக்காட்சியில் பட்டிமன்ற நடுவராக பலமுறை செயற்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியில் தீவிர ஈடுபாடு கொண்ட இவர், இளம் வயதுமுதல் கட்சியில் இணைந்து பணியாற்றியவர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராகவும், துணைத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனித்துப் போட்டியிடும்போது இவருக்கு திருநெல்வேலி தொகுதியில் வாய்ப்பு வழங்கப்பட்டு இரு முறை திருநெல்வேலி தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்துள்ளார்.

1996ஆம் ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் கருணாநிதியை எதிர்த்து சேப்பாக்கம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தவர்.

காங்கிரஸ் கட்சிக்காக பல்வேறு மேடைகளில் பிரசாரம் மேற்கொண்டவர். சிவாஜிகணேசன் தமிழக காங்கிரஸ் கட்சியின் முக்கிய பொறுப்பில் இருந்தபோது, அவர் வருகைக்கு முன் நெல்லை பாளையங்கோட்டையில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் பிரசார பொதுக்கூட்டத்தில் 5 மணிநேரத்திற்கும் மேலாக உரையாற்றியவர்.

பிரதமராக ராஜீவ் காந்தி இருந்த நிலையில், பிரசாரத்திற்காக அவர் நெல்லை வருகை தந்தபோது இவரது வீட்டில் மதிய உணவு எடுத்துக்கொண்டார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த ஜி.கே.மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி, கே.வி.தங்கபாலு ஆகியோருடன் நெருக்கமான நட்பு கொண்டவர்.

2001ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்து தன்னை அ.தி.மு.கவில் இணைத்துக் கொண்டார். ஜெயலலிதா இவருக்கு ஒரு கார் பரிசளித்ததாகவும் கூறப்பட்டது. ஆனால், அவரால் அ.தி.மு.கவில் நீண்டநாட்கள் நீடிக்க முடியவில்லை. ஓர் ஆண்டு இடைவெளியில் மீண்டும் காங்கிரஸ் கட்சிக்குத் திரும்பினார். அரசியலில் மிகப்பெரிய பதவிக்கு அவரால் வரமுடியவில்லை.

தொடர்ந்து இலக்கிய சமய சொற்பொழிவு ஆற்றிவந்த அவர், தனியார் தொலைக்காட்சி நடத்திய பேச்சாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சியில் நடுவராக கலந்துகொண்டார். இவரது பேச்சாற்றலும், நினைவாற்றலும், பேச்சு இலக்கிய நயமும் சிறப்பாக இருக்கும்.

1970ஆம் ஆண்டுமுதல் பல்வேறு மேடைகளில் நெல்லை கண்ணனின் தமிழ் ஒலித்து வந்தது. 1970களில் தொடங்கி தமிழக அரசியல் சூழலில் முக்கிய ஆளுமைகளாக, பிரமுகர்களாக இருந்தவர்களிடம் நெருங்கிப் பழகியவர். முன்னாள் முதலமைச்சர் காமராஜர் தொடங்கி தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரை அனைவருடனும் நட்புறவில் இருந்தவர்.

கடந்த 2020இல் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான முஸ்லிம் அமைப்பு மாநாட்டில் பேசிய அவர், பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா குறித்த சர்ச்சை கருத்தை பேசியதற்காக சிறை சென்றிருக்கிறார்.

தமிழ்நாடு அரசின் 'இளங்கோவடிகள்' விருதை அண்மையில் பெற்றமை குறிப்பிடத்தக்கது. குன்றக்குடி அடிகளாருடன் இணைந்து பட்டிமன்றங்களை அறிவார்ந்த விவாதத் தளங்களாக மாற்றிய இவர், காங்கிரஸ் கட்சியில் நீண்டகாலம் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், உடல்நலக்குறைவால் நேற்று தனது 77ஆவது வயதில் இவ்வுலகை நீத்தார் 'தமிழ்க்கடல்' நெல்லைகண்ணன்.

அவரது மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “பிரபல பேச்சாளரும் தமிழ்நாட்டின் முதுபெரும் தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவருமான தமிழ்க்கடல் நெல்லை கண்ணன் மறைவெய்தினார் என்றறிந்து மிகவும் வருத்தமுற்றேன். கடந்த ஆண்டு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வழங்கிய காமராஜர் கதிர் விருது பெற்ற பெரியவர் நெல்லை கண்ணன், விழா மேடையிலேயே என்னிடம் வாஞ்சையொழுக அன்பு பாராட்டிப் பேசியதை இப்போதும் நினைந்து நெஞ்சம் நெகிழ்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

வைரமுத்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில்,

''பாற்கடல்போல் தமிழில் பொங்குபவர் தமிழ்க்கடல் நெல்லை கண்ணன். சமகாலத்தின் தமிழ்க்கடல் வற்றிவிட்டது என்றே கருதுகிறேன். சமகால சமூகத்திற்கு தமிழ் உணர்வை ஊட்டிக்கொண்டே இருந்தவர் நெல்லை கண்ணன். நெல்லை கண்ணன், குடும்பத்தார் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை கூறிக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

**சொலமன் பாப்பையா**

''நெல்லை கண்ணனின் மறைவு தமிழுக்கு மிகப்பெரிய இழப்பு; இனிமேல் இத்தகைய மனிதரைக் காண்பது அரிதானது'' - என சொலமன் பாப்பையா தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

# பூமியில் நீர் உருவானதற்கு சிறுகோள்களே காரணம்



சூரிய மண்டலத்தின் வெளிப்புற விளிம்புகளிலிருந்து சிறுகோள்களால் பூமிக்கு நீர் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014ஆம் ஆண்டு ஜப்பானிலிருந்து ஏவப்பட்ட 'ஹயபுசா-2' விண்கலம், 185 மில்லியன் மைல் தொலைவிலுள்ள ரியுகு சிறுகோளில் 5.4 கிராம் பாறைகள்-தூசிகள் சேகரித்து, 2020ஆம் ஆண்டு பூமிக்கு திரும்பியது.

6 வருட விண்வெளிப் பயணத்தில் சேகரிக்கப்பட்ட அரிய மாதிரிகளை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், பூமியில் நீர் ஆதாரம் உருவானதற்கு சிறுகோள்கள் காரணமாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளனர்.

# 10 குழந்தைகள் பெற்றுக்கொண்டால் 13 பவுண்ட்கள் பரிசு

## ரஷ்ய ஜனாதிபதி புட்டின் அறிவிப்பு



ரஷ்யாவில் 10 குழந்தைகளைப் பெற்றால் ரூ.13 இலட்சம் பரிசாகக் கிடைக்கும் - என அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அறிவித்துள்ளார்.

ரஷ்யாவில் மக்கள் தொகையை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கையாக ஜனாதிபதி புட்டின் 10 அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெண்களுக்கு 13,500 பவுண்ட் (இந்திய ரூபாப்படி 13 இலட்சம். இலங்கை ரூபா பெறுமதியை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்) பரிசு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

மிகப்பெரிய நிலப்பரப்பை வைத்திருக்கும் ரஷ்யா சமீபகாலமாக மக்கள்தொகைப் பெருக்கத்தில் சரிவை அடைந்துள்ளதால் புட்டின் இந்தப் புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார். மேலும், 10ஆவதாக பிறக்கும் குழந்தைக்கு ஒரு வயது நிறைவடைந்தவுடன் இந்தத் தொகை கிடைக்கும் என்றும் போரில் அல்லது அவசரநிலையில் குழந்தைகளில் யாரேனும் உயிரிழந்தாலும் பரிசு கிடைக்கும் என்றும் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1940ஆம் ஆண்டுமுதல் மக்கள்தொகையை அதிகரிக்கும் பொருட்டு ரஷ்யாவில் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் பள்ளிவாசல் தொழுகையின்போது குண்டுவெடிப்பு: 35 பேர் பலி; படுகாயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடம்



ஆப்கானின் பள்ளிவாசலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 35 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளதுடன், பலர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலிலுள்ள பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் வழக்கமான தொழுகை நடந்துகொண்டிருந்தபோது பள்ளிவாசலுக்குள் பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதில், 35இற்கும் மேற்பட்டோர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். ஏராளமானோர் காயமடைந்தனர். உடனடியாக, இராணுவ வீரர்கள் அங்கு குவிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

# சீன உளவுக் கப்பலின் தாக்கத்தை உன்னிப்பாக கண்காணிப்போம்

## இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் தெரிவிப்பு



சீன உளவுக் கப்பலால் இந்தியாவின் நலன்களில் ஏற்படும் தாக்கம் குறித்து உன்னிப்பாக கண்காணிப்போம்'' - என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - தாய்லாந்து கூட்டு ஆணைய கூட்டத்தில் பங்கேற்பதற்காக தாய்லாந்து தலைநகர் பெங்கொங் சென்றுள்ள மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கரிடம், சீன உளவுக் கப்பல் வருகை குறித்து கேட்டபோது,

அண்டை நாட்டில் நடக்கும் விடயங்கள், இந்தியாவின் பாதுகாப்பு விவகாரங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருந்தால், அதில் கவனம் செலுத்துவோம். இந்தியாவின் நலன்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்த நிகழ்வையும் மிக மிக உன்னிப்பாக கண்காணிப்போம் - எனத் தெரிவித்துள்ளார்.

சீன உளவுக் கப்பல் ‘யுவான் வாங்-5' இந்தியாவின் கடும் எதிர்ப்பை மீறி செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வந்தது. அந்தக் கப்பலில், 750 கிலோ மீற்றர் தூரம் வரையுள்ள இடங்களை கண்காணிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, கூடங்குளம், கல்பாக்கம் அணுமின் நிலையங்கள், ஶ்ரீஹரி கோட்டா ரொக்கெட் ஏவுதளம் மற்றும் தென் இந்தியாவிலுள்ள இந்திய இராணுவ நிலையங்களை சீன உளவுக் கப்பல் கண்காணித்து பாதுகாப்பு இரகசியங்களை சேகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. இதுதொடர்பான கவலைகளை இந்தியா தெரிவித்ததால், கப்பலின் வருகையை தள்ளிவைக்குமாறு சீனாவிடம் இலங்கை கேட்டுக்கொண்டது.

அதனால், கடந்த 11ஆம் திகதி வரவேண்டிய கப்பல், தாமதமாக 16ஆம் திகதி வந்து சேர்ந்தது. இலங்கையின் சிறப்பு பொருளாதார மண்டலத்துக்குள், கப்பலின் தானியங்கி அடையாள சாதனத்தை இயக்க நிலையில் வைத்திருக்க வேண்டும், இலங்கை கடல் பகுதியில் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனைகளை இலங்கை அரசு விதித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. 22ஆம் திகதிவரை ஹம்பாந்தோட்டை துறைமுகத்திலேயே கப்பல் நிறுத்தப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

# வெள்ளத்தில் மிதக்கும் ஒடிசா: 4.67 இலட்சம் பேர் பாதிப்பு



ஒடிசாவில் தொடர் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் 12 மாவட்டங்கள் மூழ்கியுள்ளதுடன், சுமார் 4 இலட்சத்து 67 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒருவாரகாலமாக பெய்துவரும் கடும் மழையால் சம்பல்பூர், ஜகத்சிங்பூர், கேந்திரபாலா, பூரே மற்றும் குர்தா உள்ளிட்ட மாவட்டங்கள் கடும் பாதிப்பை சந்தித்துள்ளன.

இதுவரை 4 இலட்சத்து 67 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நேற்று மட்டும் 60,000 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

# கார்கீவ் நகர் மீது ரஷ்யப் படை குண்டுவீச்சு

## 4 பேர் உயிரிழப்பு; 10 பேர் படுகாயம்



உக்ரைனின் கார்கிவ் நகரில் ரஷ்யப் படைகள் நடத்திய தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளதுடன், 10இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கார்கிவ் நகரில் ரஷ்யாவின் குண்டுவீச்சுத் தாக்குதலால் அடுக்குமாடி குடியிருப்பொன்று தீப்பிடித்து எரிந்ததால் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. இந்தபங போர் இன்று 176ஆவது நாளை கடந்து தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

ரஷ்ய தாக்குதலால் உக்ரைன் தலைநகர் கீவ், இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ் துறைமுக நகரான மரியுபோல் உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் உருக்குலைந்துள்ளதுடன், 87 இலட்சத்துக்கும் அதிகமானோர் உக்ரைனிலிருந்து வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

கிழக்கு உக்ரைனை கைப்பற்றுவதற்காக வேகமாக முன்னேறிவரும் ரஷ்யப் படைகள் நாட்டில் பிற பகுதிகளிலும் தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றன.

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரான கார்கிவ்வை கடந்த பெப்ரவரி மாதம் பெரும் படை திரட்டி ரஷ்யா கைப்பற்றியபோதும் உக்ரைன் வீரர்களின் பலமான எதிர்ப்புக் காரணமாக அதனைத் தனது கட்டுக்குள் கொண்டுவர இயலவில்லை. இந்நிலையில், நேற்று கார்கீவ் நகர் மீது மீண்டும் தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7